விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 01 வியாழக்கிழமை (14.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 26

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

# அரியாலை மற்றும் தென்மராட்சியில் உயர்பாதுகாப்பு வலயம் நீக்கம்!

## இன்று பொங்கலை கொண்டாடவும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு மற்றும் யாழ்.நகர், கிழக்கு அரியாலை, கொழும்புத்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் நேற்று மீள்குடியேற்றம் ஆரம்பமாகியுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தமது பிரதேசத்திற்குள் நேற்றுப் பிரவேசித்து தத்தமது வீடுகளைப் பார்வையிட்டனர். அப்பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மனுத்தாக்கல்

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளரான சட்டத்தரணி சரத் ஹோங்காங்கே இந்த மனுவை தாக் கல் செய்துள்ளார் அமெரிக்கா குடியுரிமை கிறீன்காட் பெற்ற அமெரிக்கா ஒருவராக சரத் பொன்சேகா காணப்படுகின்றார். இவ்வாறான ஒரு நபர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான உரிமை இல்லையெனவும் இந்தநிலையில் சரத் பொன்சேகாவின் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டமை இலங்கையின் அரசியல் யாப்புக்கு முரணானது என்று பகிரங்கமாக அறிவிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 13 நாட்கள் உள்ள நிலையில் இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் நாளை இந்த மனு மீதான (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசை போர்க்குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்ற ஐ.நா.செயலர் முயற்சி

### இன்னர்சிற்றி பிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அண்மையில் இலங்கை இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை நிர்வாணப்படுத்தி சுட்டுக்கொல்வது போன்ற காட்சிகளை கொண்ட சனல் 4 தொலைக்காட்சி வீடியோ தொடர்பான போர் குற்றங்களிலிருந்து இலங்கை அரசாங்கத்தை பான் கீ மூன் காப்பாற்ற முனைவதாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

இதனை ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிபுணத்துவ குழுவினரால் இந்த வீடியோக்காட்சி பரிசீலிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதாக கூறினார்.

அத்துடன் இந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு இலங்கைக்கு எதிராக யுத்தகுற்ற விசாரணைகளை (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகளின் நிலை தொடர்பில் இரண்டு நாட்களில் பூரண அறிக்கை

### நீதி அமைச்சர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுதலைசெய்யுமாறு கோரி கடந்த இரண்டு வாரங்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரண்டு நாட்களுக்குள் பூரண அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாக நீதி மறுசீரமைப்பு அமைச் சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

நாடு பூராகவும் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பில் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் நேரடியாக சிறைச்சாலைக்கு வருகை தந்து உறுதி மொழி வழங்க வேண்டும் (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - பொன்சேகா ஒப்பந்தம் இலங்கை மீது மீண்டும் சர்வதேச அழுத்தம்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பும் சரத்பொன்சேகாவும் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தால் இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன என அமைச் கெஹெலிய ரம்புக்வெல குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தால் தமிழ் மக்களின் வாழும் உரிமைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கண்டி, சுவிஸ் ஹோட்டலில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் கெஹெலிய் ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மனிதாபிமான (20ஆம் பக்கம் பார்க்க)

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




அனைவருக்கும்
தைப் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
வலம்புரிக்
குடும்பம்

## பி.பி.சி. செய்தியாளர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் நேற்று பொலநறுவை பகுதியில் தாக்கப்பட்டுள்ளார். பி.பி.சியின் சிங்கள சேவையின் பெண் செய்தியாளரே தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிக்கும் தேர்தல் வன்முறைகள்

### கட்சி ஆதரவாளர்களிடையே பொலநறுவையில் மோதல்

(கொழும்பு)

பொலநறுவையில் நேற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஜனாதிபதி பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கும் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வர்ணக் கலண்டர்

நாளைய வலம்புரியுடன் தெய்வீக வர்ணக் கலண்டர் வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

T.K.T யின் இதயங்கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்

சுத்தமான நல்லெண்ணெய்
விற்பனையாளர்

மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.

T.K.T Mark

BEST GINGELLY OIL



(C-4230)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காத்திருக்கும் ஏக்கத்திற்கு,
எதிர்பார்த்திருக்கும் எதிர்காலத்திற்கு,
நம்பிக்கையுடனான மாற்றத்திற்கு,

# தை பிறந்தால் வழி பிறக்கும், எங்களுக்கும் ஒளி கிடைக்கும்



ஒளிமயமான எதிர்காலத்தினை எந்தத் தடையுமின்றி
உங்களுக்கு பெற்றுக் கொடுத்து, வாழ்க்கையின் சுமைகளை குறைத்து
சகலரும் பொருளாதாரத்தில் ஓர் சிறந்த நிலைமையை அடைந்து
இந்த இலங்கை தேசத்தில் சுபீட்சமாக வாழ்வதற்கு
இத்தைத் திருநாளில் ஓர் வாக்குறுதி.



ஜெனரல் சரத் பொன்சேகா

நம்பிக்கை மிக்க மாற்றம்

# அமைச்சர் டக்ளஸின் பொங்கல் வாழ்த்துச் செய்தி

(யாழ்ப்பாணம்)

பொங்கலோடு சேர்ந்து மகிழ்ச்சியும் பொங்கட்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். மேலும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அகதிகள் என்ற அவலமும் இடப்பெயர்வு என்ற இன்னலும் இந்தப் பொங்கலோடு இல்லாமல் போகட்டும்.

இழந்த உரிமைகளை மீளப் பெற்றோம். இனி எங்கள் வாழ்வில் அமைதி தங்கட்டும். வேட்டோசைகள் ஓய்ந்த எங்கள் தேசத்தில் கௌரவமான அரசியல் உரிமைகளோடு முக முயர்த்தி வாழ்வோம்.

இழந்த உயிர்களை தவிர ஏனைய எல்லாவற்றையும் ஓரணி திரண்டு வென்றெடுப்போம். ஜனநாயகம் எங்கள் பயணம். நடைமுறைச் சாத்தியமான வழியில் நமது உரிமைகளையும், வாழ்வையும் வெல்வோம். அந்த வெற்றியை எந்நாளும் பாதுகாப்போம். இந்த உறுதியை இதயத்தில் ஏற்றியவர்களாக மகிழ்ச்சியோடு தைத் திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம்.

நம்பிக்கையோடும்பூரிப்போடும்தைப் பொங்கலைக்கொண்டாடும்அனைவருக்கும் தனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா தனதுசெய்தியில் தெரிவித்துள்ளார். (ச)


## ஞானோதய அக்கடமி சாவகச்சேரி

**A/L 2012 கலை வர்த்தக பிரிவுகள்**

**ஆரம்பம்- 16.01.2010 சனிக்கிழமை காலை 11.00 மணி**

தமிழ் :- திரு. இரா.அகிலன்
- திரு. சிவமுகுந்தன்

புவியியல் :- திரு. செந்தூரன்

வரலாறு :- திரு. விக்கி

பொருளியல் :- திரு. அன்ரனி

இந்துநாகரிகம் :- திரு. ஜோதீஸ்வரன்
- திரு. சுரேஷ்

அரசியல் :- திரு. பொன்சந்துரு

நாடகமும்-அரங்கியலும் :- திரு. இரகுதாஸ்

**மீண்டும் தென்மராட்சியில்**

தமிழ் :- இரா.அகிலன்

A/L 2010 பரீட்சை வழிகாட்டல் தொடர் கருத்தரங்கு

ஆரம்பம் :- 16.01.2010

மு.குறிப்பு :- ஏனைய நிறுவன மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

(C-4227)

## ஓவ் (f) செற் மிசின் விற்பனைக்கு

லீகல் அளவு எலட்போனிக் மொடல் உடன் விற்பனைக்கு

தொடர்புக்கு:-
புதிய மஹாத்மா பிறிண்டேர்ஸ்
இல.41, இந்து மகளிர்லேன்,
கந்தர்மடம்.

(352)

## விற்பனைக்கு

புலோலி சூசையப்பர் கோவிலுக்கு அருகாமையில் வீட்டுடன் சேர்ந்த 5 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

உடன் தொடர்புகளுக்கு
அ.கொலின் :- 0716123127

(351)


## மரண அறிவித்தல்

### திருமதி கைலாசபிள்ளை கண்ணம்மா



புங்குடுதீவு மாரியம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கண்ணம்மா அவர்கள் 13.01.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் (முன்னாள் வர்த்தகர், பழக்கடை இரத்தினம், யாழ்ப்பாணம் மார்க்கட்), அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மருதப்பு வள்ளியம்மையின் மருமகளும், புஸ்பமாலா, சிறிஸ்காந்தன் (சிறி கடை புங்குடுதீவு, புங்குடுதீவு கமநல கேந்திர நிலையம் பெருங்காடு வடக்கு தலைவர், புங்குடுதீவு பத்திரிகை முகவர்), ரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), ஜீவமாலா, சிறிவரதன் (சரண்ஜா கொமினிகேசன், வரதன் எலக்ரிக்கல் கொன்ரக், கஸ்தூரியார் வீதி), சிறிபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (தறுமு) திருநெல்வேலி, விஜயலலிதா, தங்கேஸ்வரன் (வயறிங் கனகு கராச்), கலாராணி, சீதாலக்ஸ்மி, அருளாணந்தம் (பாட்ஷா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் சின்னம்மா, தம்பையா (கனடா) காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பொன்னம்மா, கந்தையா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதர்சினி-சுரேஸ்குமார் (சிறிலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), பிரசாந்தி (யாழ். சமூக செயற்பாட்டு மையம் JSAC), கீர்த்திகா (மக்கள் வங்கி, கன்னாதிட்டி), சிவகஜனி (FORUT முன்பள்ளி தொண்டர் புங்குடுதீவு), சாரங்கன் (2010 வர்த்தகப் பிரிவு, யாழ். பரியோவான் கல்லூரி), மயூதா (உயர்தர மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரதீசன் (யாழ்.மத்திய கல்லூரி), சுகிர்தா (வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய), சரண்ஜா, துளசிகா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அபிநந்தன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) வனஜா (ஜேர்மனி), தனுசியன், தர்சிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), வேணுகோபன் (யாழ். மத்திய கல்லூரி), பிரியங்கா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நேகாவின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 15.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37/24, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:
021 222 6882
0777 570 103
021 300 1636

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
கை.சிறிவரதன்
(சரண்ஜா கொமினிகேசன், சிறிகடை)
கை.சிறிஸ்காந்தன் (புங்குடுதீவு)

(349)


## ஜயசர


Diesel Oven


Gas Oven


Deep Fryer


Spiral Mixer


Candy Floss machine


Bread Sliker


Cake Mixer


Pop Corn Machine

காஸ் அவண்,
கேக் கலவை இயந்திரம்,
ஆழ்நிலை எண்ணெய் பாத்திரம்,
வெங்காயம் வெட்டும் இயந்திரம்,
பொம்பாய் முட்டாய் இயந்திரம்,
மா கலவை,
பொப் கோர்ன் இயந்திரம்,
காஸ் ரைஸ் குக்கர்,
இறைச்சி அரைவை இயந்திரம்,
கூல்ட்ரிங்ஸ் டிஸ்பென்சர்
உள்ளிட்ட தெரிவு செய்த
ஏராளம் உபகரணங்கள்.

விற்பனைக்கு
பிந்திய சேவை,
உத்தரவாதம் உண்டு.

பேக்கரி, கேட்டரிங், ஹோட்டல் உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிப்போர்

79, வேல்ஸ் குமார மாவத்தை, கொழும்பு-14.
தொ.பே: 0112336401 ,0714181311

## திருநெல்வேலியில் HNB-ன் 210வது பணப்பரிவர்த்தனை இயந்திரம் (ATM)

திருநெல்வேலி மற்றும் திருநெல்வேலி சார்ந்த வாடிக்கையாளர்களின் நலன் கருதி 24 மணி நேர சேவையாக எமது தன்னியக்க பணப்பரிவர்த்தனை இயந்திரம் (ATM) இல: 54 A, பலாலி வீதி, திருநெல்வேலியில்...




**எந்நேரத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள்**

- நாடெங்கும் பரந்துபட்டுள்ள கிளைகளின் கணக்குகளிலிருந்து நாளாந்தம் ரூபா 100, 000/- வரையான மீளப் பெறுகை
- VISA நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/ வெளிநாட்டு வரவு அட்டை(debit card) கடனட்டை (Credit card) பணமீளப்பெறுகை
- கணக்கு மீதி பரிசீலனை
- குறுகிய விபரக் கூற்று (Mini Statement) பெறும் வசதி
- கணக்குகளிடையான பணப் பரிமாற்றல் வசதிகள்

**HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி**

*Your Partner in Progress* HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

(C-4223)

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகத்தினால் நடத்தப்படும் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஸ்ரீறஜீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் சி.ஏ. மோகன்ராஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி வை.தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் கே. ஆர்.இராஜசேகரம், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ். முத்துக்குமாரசாமி, மருத்துவர் எஸ்.வேணுகோபன், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.அனுரகாந்தன், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக முன்னாள் தலைவர் ஆர்.கிருபராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேற்படி அறநிதியைப் பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

# மின்சார கட்டணத்தை கணனி மூலம் செலுத்தும் புதிய நடைமுறை ஆரம்பம்

### வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 2010 இன் ஆரம்ப அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக மின்சார பட்டியல் கொடுப்பனவினை (Electricity Bill) நேரடியாக கணனி மூலம் அனுப்பும் ஒன்லைன் வசதி Online வடமாகாண அஞ்சல் அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பகல் 12 மணிக்கு அஞ்சல் அலுவலக உயர் அதிகாரிகளினால் இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் சேவையின் மூலம் மின்சாரக் கட்டணங்கள் அலுவலக வேலை நேரங்களிலும் மற்றும் சனி உட்பட மாலை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச் சேவை எமது திணைக்களத்தின் நவீன சேவைகள் அபிவிருத் திட்டத்தின் முதல் படி என்றமையால் வாடிக்கையாளர்கள் எமக்கு ஒத்துழைப்பு நல்கி தொடர்ந்தும் நற்சேவை பெருக்க உதவும் படியும் அன்புடன் கேட்டுக்கொள்வதாக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி தெரிவித்துள்ளார். (2-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் காரைநகரிலுள்ள அனைத்து மாணவர்களிடமிருந்து இலவச கலை வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் அறநெறிச்சமயம், பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், மாலை கட்டுதல், கோலம்போடுதல், தோரணம் செய்தல் ஆகிய பயிற்சி நெறிகளில் விரும்பிய பயிற்சி நெறியை தெரிவு செய்து அதில் இணைந்து பயனடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கலைவகுப்புக்களில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கலாமன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது. (6-4)




## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டு பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு *வேல் கை கொண்டவன்* என்னும் விடயம் பற்றி ஆசிரியர் கே. கைலநாதன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளவுள்ளதால் அனைத்து பட்டதாரிகளையும் சமுகமளிக்குமாறு பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக் கொண்டுள்ளது. (6)

## களை கட்டியது பொங்கல் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் சந்தைகளில் நேற்றைய தினம் பொங்கல் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பெருமளவு மக்கள் திரண்டிருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

இதற்கமைய திருநெல்வேலி, கல்வியங்காடு, மருதனார்மடம், சுன்னாகம் போன்ற சந்தைகளில் பழங்கள், கரும்பு, பொங்கல் பானைகள், மஞ்சள், இஞ்சி இலைகள் போன்றன பெருந் தொகையாக சந்தைகளில் காணப்பட்டன.

இதில் திருநெல்வேலிச் சந்தையிலேயே மிகக் கூடியளவு மக்களை காணக்கூடியதாகவிருந்தது. (2)

## திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தமிழர் திருநாளான தைத்திருநாளை சிறப்பிக்கும் பொங்கல் தின நிகழ்வுகள் இன்று காலை இடம்பெறவுள்ளன.

காலை 5 மணிக்கு பொங்கல் வைபவமும் தொடர்ந்து 7 மணிக்கு பண்பாட்டுத் திருப்பலியும் இடம்பெறும். திருப்பலியை அருட்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் ஒப்புக்கொடுப்பார். திருப்பலியின் பின்னர் திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் சிலரின் பொங்கல் தொடர்பான கவிதை நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினால் கலைத்தூது கலையக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆங்கிலப் பயிற்சிக் கூடத்தின் திறப்பு விழா இடம்பெறும். அமலமரித் தியாகிகளின் யாழ்.மாகாண முதல்வர் அருட்பணி போல் நட்சத்திரம் அடிகள் இதனைத் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வுகளில் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (6)

## எழுத்தாளர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் எழுத்தாளர் ஒன்றுகூடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் முருகபூபதியுடனான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. உலகத்தமிழர் மாநாடு பற்றி கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். இலக்கிய வட்டத்தின் செயலாளர் நயினை கிருபானந்தா தெரிவித்துள்ளார். (6-4)

## பொங்கல் விழாவும் அபிராமிப்பட்டர் விழாவும்

(யாழ்ப்பாணம்)

மாவட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பொங்கல் விழாவும் மாலை 3.30 மணிக்கு அபிராமிப்பட்டர் விழாவும் நடை பெறவுள்ளதாக ஆலய பிரதம குரு தெரிவித்துள்ளார். (6-4)

# யாழ்ப்பாண வானியல் இரவு -2010

"இப் பிரபஞ்சம் நீங்கள் கண்டு பிடிக்கவே" ("The Universe, Yours to Discover") எனும் கருப்பொருளுடன் 2009 ஆம் ஆண்டை சர்வதேச வானியல் ஆண்டாக (International Year of Astronomy, IYA 2009) பிரகடனப்படுத்தியிருந்தார்கள். கலிலியோ கலிலி (Galileo Galilei) என்ற விஞ்ஞானி முதன் முதலாக வானியல் தொலைகாட்டியை உருவாக்கி, உபயோகித்து 400 வருடங்கள் பூர்த்தியானதையொட்டியே 2009 ஆம் ஆண்டை சர்வதேச வானியல ஆண்டாக தெரிவு செய்தார்கள். இதற்காக 2009 இல் உலகம் முழுவதும் ஏராளமான வானியல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன். ஆயினும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான நிகழ்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை. அக் குறைபாடடை நிறைவு செய்யும் முகமாக யாழ. பல்கலைக்கழகமும் கொழும்பிலுள்ள புதிய தொழில்நுட்பங்களுக்கான ஆதர். சி. கிளாக் மையமும் இணைந்து "Jaffna Astro Night - 2010" எனும் நிகழ்வை நடத்தவுள்ளது. இதற்கமைய நாளை . மாலை 5மணி முதல் 7 மணிவரை வானியல் கருத்தரங்கும் இரவு 7 மணி முதல் 10 மணி மணிவரை வானியல் அவதானிப்புகளும் யாழ். பல்கலைக்கழக பிரதான விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகள் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 2011, 2012 இல் தோற்றவுள்ள மாணவர்களுக்கும், வகுப்பு 9 இல் வானியலை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இதற்கான அனுமதி அட்டைகளை இந் நிகழ்வின் பொறுப்பாளரான யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி நா.சிவயோகன் அல்லது இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியரான இ. குமரன் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலும் வடமராட்சி மாணவர்கள் நெல்லியடி ம.ம.வி அதிபர் இ. செ. சேதுராஜாவிடமிருந்தும், தென்மராட்சி மாணவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஆ.கைலாசபிள்ளையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அனுமதி அட்டையின் விலை ரூபா. 50/= ஆகும். பாடசாலை மாணவர்களுக்கானஅனுமதி அட்டைகள் அவர்களின் பொறுப்பாசிரியர்களிடம் மட்டுமே வழங்கப்படும் எனவும் 20 மாணவர்களுக்கு ஒரு பொறுப்பாசிரியர் வதம் கட்டாயமாக வரவேண்டும் எனவும் அனைவரும் தமக்குத் தேவையான உணவு வகைகள், நீர், குடை, நுளம்புத்திரி, குளிர் ஆடைகள் போன்றவற்றுடன் தமது சொந்த போக்குவரத்து வாகன வசதிகளுடனும் வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆர்வமுள்ள பொது மக்களும் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு தன்னுடன் நேரடியாக (077 666 4766) அல்லது அலுவலகத்துடன் (021 222 5924) தொடர்பு கொள்ளுமாறு இந் நிகழ்வின் பொறுப்பாளரான கலாநிதி நா.சிவயோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் நாளை காலையில் நடக்கும் கங்கண சூரிய கிரகணத்தைத் திரையில் பார்ப்ப தற்கும் அதேயிடத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அன்று காலை 10 மணியளவில் துணைவேந்தர் பேராசிரியர். நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர். திஸ்ஸ விதாரண இந் நிகழ்வை உலகெங்கும் உள்ள வர்கள் கண்டு களிக்கக் கூடியவாறு இணையத்தளம் ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளார் என்றும் கலாநிதி நா. சிவயோகன் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)




Computer Express
Institute of Information Technology
No 167,Kasthuriyar Road, jaffna. T.P-021 2228250

உறுதியானதும் ஸ்திரமுள்ளதுமான எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள இன்றே எம்நிறுவனத்துடன் இணைந்து கணனி கற்கை நெறிகளை கற்றுக்கொள்ளுங்கள்.

அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான தொழில் சார் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...

அனைத்துமாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது நிறுவனத்தின்சார்பாக இனிய தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

உங்கள் பதிவுகளை 16.01.2010 தொடக்கம் 31.01.2010 வரை மேற்கொள்ளலாம்.



(C-4224)

# இன்று ஒரு தகவல்

## இறையருள் யாருக்குக் கிடைக்கும்

ஒருத்தர் வந்து நபிகள் நாயகத்திடம் சொன்னார்:

"இறைதூதரே, ஒரு பெண்மணி ஐந்து வேளையும் தொழுகிறாள். நோன்பு நோற்கிறாள். தாராளமாக தர்மம் செய்கிறாள். ஆனால் அண்டை வீட்டாரைத் தன் நாவினால் புண்படுத்துகிறாள்" என்றார்.

"இதற்கு இறைதூதர் அளித்த பதில் என்ன தெரியுமா? அந்தப் பெண்மணி நரகம் செல்வாள்" என்றார்.

மனித நேயம் தான் உண்மையான இறைவழிபாடு.

எல்லாத் தப்பும் செய்து கொண்டு 'கடவுள் என்னைக் காப்பாற்றுவார்' என்பதில் அர்த்தமில்லை.

இறையருள் யாருக்குக் கிடைக்கும்?

இந்தக் கேள்விக்கு விடை தெரிய வேண்டுமா?

அப்படியானால் இறைதூதர் சொல்லிய இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஒரு வறண்ட பூமி. தண்ணீரே கிடையாது.

அங்கே ஒரு மனிதர் நடந்து போய்க்கொண்டிருந்தார்.

இந்த நேரம் மழை பொழிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அந்த மனிதர் யோசித்துக் கொண்டே ஆகாயத்தைப் பார்க்கிறார்.

மேகத்திலிருந்து ஒரு குரல் கேட்கிறது.

"இன்னொருவடைய தோட்டத்தில் மழை பெழிவாயாக!" என்று ஒரு குரல் கேட்டது.

அந்த மனிதர் நின்று கவனிக்கிறார்.

மேகம் உடனே நகர்ந்து போகிறது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் மழை பொழிகிறது.

மழை நீர் ஒரு கால்வாயாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இந்தத் தண்ணீர் எங்கே போகிறது?

அந்த மனிதர் ஓடும் அந்தத் தண்ணீரைப் பின்தொடர்ந்து போகிறார்.

அங்கே ஓர் ஆள் மண்வெட்டியால் அந்தத் தண்ணீரைத் திருப்பிவிட்டு தன் தோட்டத்துக்குப் பாய்ச்சினார்.

அந்த ஆளிடம் இந்த மனிதர் விசாரித்தார்.

"உனது பெயர் என்ன?"

அந்த ஆள் தன்னுடைய பெயரைச் சொன்னார்.

உடனே இந்த மனிதர் சொன்னார்.

"ஐயா... கொஞ்ச நேரத்துக்கு முன் அந்த வழியால் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆகாயத்தில் ஒரு குரல் கேட்டது. அண்ணாந்து பார்த்தேன்.

மேகத்திலிருந்து அந்தக் குரல் வந்தது.

உங்கள் பேரைச் சொல்லி உங்கள் தோட்டத்தில் மழை பொழியும் படியாக அது சொல்லியது. அதை நான் கேட்டேன்."

"அப்படியா?"

"ஆமாம்... அது சரி இந்த அளவுக்கு உங்களுக்கு இறையருள் கிடைத்திருக்கிறதே... அதற்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இதற்கு அந்தத் தோட்டக்காரர் சொன்னார்.

நீங்கள் கேட்பதால் சொல்கிறேன்.

இந்தத் தோட்டத்தில் எது விளைந்தாலும் அதை மூன்று பங்காகப் பிரித்துவிடுகிறேன். ஒரு பகுதியை தர்மம் செய்து விடுவேன்.

இரண்டாவது பகுதியை எனக்கும் என் குடும்பத்தினருக்காகவும் வைத்துக் கொள்கிறேன்.

மூன்றாவது பகுதியை இதே நிலத்தில் மீண்டும் பயிர் செய்துவிடுவேன்.

இப்பொழுதுதான் அந்த மனிதருக்குப் பரிந்தது.

கடமையை ஒழுங்காகச் செய்பவர்களுக்குத்தான் இறையருள் கிட்டும் என்கிற உண்மை!

கடவுள் வழிபாடு ஒழுங்காகச் செய்கிறேன். எல்லாம் அவர் கவனித்துக் கொள்வார் என்று நினைப்பது சரியான நம்பிக்கை ஆகாது.

ஒருத்தர் தீவிரமாக இறைவழிபாடு செய்பவர்.

அவர் நபிகள் நாயகத்திடம் சொன்னாராம்.

"நான் ஐந்து வேளையும் தவறாமல் தொழுகிறேன். ஆகவே என் ஒட்டகத்தைக் கட்டிப் போடுவதில்லை" என்றாராம். அதற்கு நபிகள் நாயகம் சொன்னாராம்.

"நண்பரே! நீங்கள் ஐந்து வேளையும் தொழுங்கள். அதேவேளை உங்கள் ஒட்டகத்தையும் கட்டிப் போடுங்கள்" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர் வலைகள் மூழ்கடிப்பு

(இராமேஸ்வரம்)

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர் படகுகளின் வலைகளை இலங்கை கடற்படையினர் வெட்டி கடலில் மூழ்கடித்துள்ளனர்.

இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

கடந்த திங்கட்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 700 விசைப்படகுகள் கடலில் மீன்பிடிக்கச் சென்றன.

இந்தப் படகுகள் வழக்கம் போல் இந்திய, இலங்கை கடல் பகுதியில். மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு மாலை 4 மணியளவில் 5 போர் கப்பலில் இலங்கை கடற்படையினர் ரோந்து வந்தனர்.

பின்னர் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த லிடன், மிக்கேல், சூசை, செல்வம் உள்ளிட்ட 10 பேருக்கு சொந்தமான விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் பிடித்தனர்.

இதையடுத்து படகில் இருந்த மீனவர்களை கயிற்றால் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

பின்பு அரிவாளால் மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் மூழ்கடித்தனர்.

இதனால் மீனவர்களுக்கு ரூ. 3 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பர் முதல் இராமேஸ்வரம், மண்டபம், தனுஷ்கோடி மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தவில்லை.

இந்த நிலையில் 45 நாட்கள் கழித்து மீண்டும் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதால் மீனவர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

(2-6)

# நாளை அபூர்வ சூரிய கிரகணம்

நாளை சூரிய கிரகணம் ஏற்படவுள்ளது. இக்கிரகணம் இலங்கையின் வட பகுதியில் முழுமையாக காணக்கூடியதாக இருக்கும் எனவும் தென் பகுதிகளில் பகுதியாகவே தெரியும் எனவும் ஆர்தர் சீ. கிளார்க் தொழில் நுட்பவியல் மையம் தெரிவித்துள்ளது.

இக்கிரகண நிகழ்வு முற்பகல் 11.11 தொடக்கம் பிற்பகல் 3.12 வரை ஏற்படும். இது 1955 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஏற்பட்டது போன்ற முழுமையான சூரிய கிரகணமென்றும் இதன் போது சூரிய பரிவட்டத்தின் 90 வீதம் மறையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதை நேரடியாக கண்ணால் பார்ப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பஞ்சாங்கத்தின் இது கங்கண சூரிய கிரகணம் என கூறப் பட்டுள்ளது. (6)

# சுவாமி விவேகானந்தர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி உயர்தர பாடசாலையில் இந்து மாமன்றம் நடாத்தும் சுவாமி விவேகானந்தர் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்தவுள்ளார்.

இவ் உயர்தர பாடசாலை எல்லா பாடசாலைகளுக்கும் முன்மாதிரியாக வருடா வருடம் தொடக்கத்தில் முதல் நிகழ்வாக சுவாமி விவேகானந்தரின் விழாவை அனுஷ்டித்து வருவது குறிப்பிடத்தக்கது. (6)

# இராசி பலன்

*14-01-2010*
*(தை 01 வியாழக்கிழமை)*
*சதுர்த்தசி முற்பகல் 11.06 மணிவரை*
*பூராடம் பின்னிரவு 4.29 மணிவரை*
*இராகுகாலம் 2.04 - 3.34 மணிவரை*
*சுபநேரம் 8.04 - 9.34 மணிவரை*
*அமாவாசை விரதம்*
*தைப்பொங்கல்*

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, திடீர் பயணம், போசன சுகம், தெய்வ தரிசனம். |
| இடபம் | அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், தனவிரயம். |
| கடகம் | மனமகிழ்ச்சி, உறவினர் வருகை, தெய்வ சிந்தை, விருந்துபசாரம். |
| சிங்கம் | தொழில் நன்மை, புத்திரரால் கவலை, ஆரோக்கியக்குறைவு, பணவிரயம். |
| கன்னி | உறவினர் வருகை, சுபநிகழ்வு, மனச்சஞ்சலம், சுபசெலவு. |
| துலாம் | நற்கீர்த்தி, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை. |
| விருச்சிகம் | மனோ சங்கடம்,ரோக நிலை,திடீர் நன்மை, பிரயாண சுகம். |
| தனுசு | வெகுமானம், போசன நன்மை, முயற்சி தாமதம்,தெய்வ தரிசனம். |
| மகரம் | பிறருக்கு உதவி செய்தல், சிந்தனை மிகுதி, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| கும்பம் | உறவினர் வருகை,மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, மேன்மை. |
| மீனம் | நன்கொடை, எடுத்த காரியம் கைகொடும், உற்சாகம், போசன சுகம். |

வளவன்

# இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரின் தைப்பொங்கல் ஆசிச் செய்தி



தஷிணாயணம், உத்தராயணம் என வருடத்தில் இரண்டு அயனங்கள் வருகின்றது. தஷிணாயன ஆரம்பம் ஆடிப்பிறப்பாகவும், உத்தராயண ஆரம்பம் தைப் பொங்கல் நன்நாளாகவும் சைவ சமய பெருமக்களால் கொண்டாடப்படுகின்றது.

தைப் பொங்கல் நன்நாள் உழவர் பெருமக்களால் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் சிறப்புமிகு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

இத்திருநாளில் இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களும் கூடிய விரைவில் தம் சொந்த இடங்களில் மீள் குடியேறி சாந்தி, சமாதான, சகோதரத்துவத்துடன் கூடிய வாழ்க்கை வாழவேண்டும் என பரம் பொருளாகிய இறைவனை நாமனைவரும் ஒரு மனதுடன் பிரார்த்திப் போமாக.

அனைத்து மக்களும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ இப்பொங்கல் நன்நாளில் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்

*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"*

**ப. மகேஸ்வரக்குருக்கள்**
**தலைவர்,**
**சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்,**
**இலங்கை.**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 240 | 140 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 200 |
| தக்காளி | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 120 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 220 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 140 | 150 | 120 |
| கறிமிளகாய் | 150 | 160 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 160 | -- |
| கத்தரி தம்புள்ள | 140 | 150 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 45 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# 2010 புத்தாண்டு பலன்கள்

## மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி ரேவதி

**தொழில் முன்னேற்றம் ஏற்படும்!**

**உதவும் குணத்தாலும், உழைக்கும் கரத்தாலும் உயர்ந்த நிலையை அடையும் மீன ராசி நேயர்களே!**

புத்தாண்டு பிறந்து உங்களுக்குப் புதிய பாதையை அமைத்துக் கொடுக்கப்போகிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட கலக்கங்கள் சிறிது, சிறிதாக மாறும்.

வந்த புத்தாண்டு வளர்ச்சியை வாயிற்படிக்கு வரவழைத்துக் கொடுக்கும். சந்தித்த நண்பர்கள் எல்லாம் சந்தோஷமான தகவல்களைச் சொல்லுவர்.

குரு ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்குப் பனிரெண்டாம் இடத்தில் சஞ்சரித்தாலும், கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்திற்கு வரும் பொழுது, மிகுந்த நன்மைகளையே வழங்கும். அந்த அடிப்படையில் பார்க்கும் பெழுது இந்த ஆண்டை இனிய பலன்தரும் ஆண்டாகவே கருதவேண்டும்.

பணத்தேவைகள் பூர்த்தியாகும். பதவி வாய்ப்புக்கள் வந்து சேரும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழி வகுப்பர்.

இராசிநாதனாக குரு அமைவதால் தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்திருக்கும். யாரைப் பார்த்து, எப்படிக் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற இரகசியத்தைத் தெரிந்து வைத்திருப்பீர்கள். அதிகாரத்தைக் காட்டிலும் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள் தான்.

உங்களுக்கு இந்தப் புத்தாண்டில் சுக ஸ்தானத்தில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் சனியும் சஞ்சரிப்பதால் சனீஸ்வர வழிபாடும், சர்ப்ப சாந்தியும் உங்களுக்குத் தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் கிரக நிலையின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவை இணைந்து செயற்பட்டால் துணிந்து காரியம் செய்யலாம்.

இல்லையேல் பணிந்து வணங்கி பரிகாரங்கள் செய்து யோக பலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

பெயரியல் முறையில், எண்கணித அடிப்படையில், குரு சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர்காலம் இனிமையானதாக அமையும்.

குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் 2010இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரப் போகின்றன.

### 01-01-2010 முதல் 30-04-2010 வரை

இக்காலத்தில் இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும். இருந்தாலும் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும்.

காரணம், தனாதிபதியான செவ்வாய் நீச்சம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். உடன்பிறப்புகளால் மனக்கசப்புத் தரும் செய்திகள் வந்து சேரலாம். தந்தையின் உடல் நலத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டு அகலும், அங்காரக வழிபாட்டில் ஆர்வம் காட்டுவது நல்லது.

சனியும் இக்காலத்தில் வக்ரம் பெறுகிறார். சப்தமச் சனி வக்ரம் பெறுவதால் குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் மன அமைதி கிடைக்கும். திடீர் விரயங்களைக் கட்டுப்படுத்த இயலாது.

குரு பார்வை உங்கள் ராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவாகிறது. அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. முன்னோர்களின் வழியில் வந்த பூமியை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்கள் மீண்டும் புதிய பூமியை வாங்கி இல்லம் அமைக்க ஏற்பாடு செய்வர்.

பழைய வாகனத்தைப் புதுப்பிக்கும் பணியில் ஒரு சிலர் ஈடுபடுவர். ஒரு சிலர் புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். எப்படியிருந்தாலும் விலையுயர்ந்த பொருள் ஒன்று வீடு வந்து சேரும்.

அஷ்டமத்தையும் 6ஆம் இடத்தையும் குரு பார்ப்பதால் ஆரோக்கியம் சீராகும். சென்ற வருடத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த எதிரிகளின் தொல்லை அகலும்.

பிற வருமானங்கள்பெருகும். சனியின் வக்ர இயக்கம் நடைபெறும். இக்காலத்தில் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். சனிக்குரிய வழிபாடுகளை முறையாக மேற்கொள்வதோடு குரு வழிபாட்டையும் மேற்கொண்டால் குதூகலங்கள் இல்லத்தில் குடியேறும்.

### 01-05-2010 முதல் 31-08-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ரம் பெறுகிறார். எனவே, கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. தங்களுக்கோ, தங்களைச் சார்ந்தவர்களுக்கோ, குடும்பத்தினர்களுக்கோ அடிக்கடி மருத்துவச் செலவுகளைக் கொடுக்கலாம்.

பணிகள் பாதியிலேயே நிற்கும். இனிய பலன்கள் நடைபெறவும். எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. கடலை நைவேத்யம் செய்தால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

இக்காலத்தில்தான் குருவின் சஞ்சாரம் மீன ராசியில் ஏற்படுகிறது. அதன் பார்வை உங்கள் ராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

எனவே, பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைவதால் இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுவீர்கள். இதயம் மகிழும் விதத்தில் சம்பவங்கள் நடைபெறும். தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்.

தோள் கொடுத்து உதவும் நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர். கட்டிடம் கட்டி குடியேற வேண்டும் அல்லது கட்டிடம் வாங்கி குடியேற வேண்டும் என்ற எண்ணம் பூர்த்தியாகும். கனவுகள் நிறைவேறும்.

இந்த நேரத்தில் பொருளாதார முன்னேற்றம் கருதி புது முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வருமானம் இருமடங்காகும். சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

தங்களின் புதல்வருக்கோ, புதல்விக்கோ திருமணம் நடத்திப் பார்க்க ஆசைப்பட்டவர்கள், இதுவரை முடியவில்லையே என்று ஏங்கிய நிலை இனி மாறும். வரதட்சணை இல்லாமலேயே உங்கள் பெண்ணை மணந்து கொள்கிறோம் என்று சொல்லி வரன்கள் வலிய வந்து சேரும். ஆயினும், புத்திர ஸ்தானாதிபதியாக சந்திரன் விளங்குவதால், பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்களைத் தொடங்கும் முக்கியப் பொருத்தங்கள் ஐந்து அமைந்துள்ளதா? என்று பார்த்துச் செய்வது நல்லது.

ஒன்பதாமிடத்தைக் குரு பார்ப்பதால் பொன், பொருட்கள் கூடும். புகழ் சேரும். நண்பர்களின் ஒத்துழைப்போடு ஆன்மீகப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். சிவாலய வழிபாடு உங்களுக்குச் சிறப்பை வழங்கும்.

### 01-09-2010 முதல் 31-12-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். எனவே பணத்தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் தொகை போதுமான அளவிற்கு வரவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

எதையும் ஒரு முறைக்குப் பல முறை செய்யும் சூழ்நிலை உருவாகும். வக்ர வியாழனின் ஆதிக்கத்தால் உடல் நலத்திலும் தொல்லைகள் உருவாகலாம். சேமிப்பு கரையாமல் இருக்க விலை உயர்ந்த பொருட்களை வாங்கி வீட்டில் வைப்பது நல்லது.

செப்டெம்பர் மாதத்தில் செவ்வாயும், சுக்ரனும் துலாத்தில் இணைகிறார்கள். எனவே, பெண்வழிப் பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

எப்போதோ வாங்கிய சொத்துக்கு இப்போது வழக்குகள் உருவாகலாம். ஒக்டோபர் மாதத்தில் புதன், சுக்ரன், சூரியன் ஆகிய மூன்றும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். 6இற்கு அதிபதியும், 8இற்கு அதிபதியும் ஒன்றாக இணைவதால் எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரும். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

சிவனையும், அம்மனையும் வழிபட்டு வாருங்கள். தேக்க நிலை மாறும். செல்வ நிலை உயரும்.

ஆண்டின் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் குடும்பச் செலவுகள் கூடும். திடீர் செலவு வந்து திக்குமுக்காட வைக்கிறதே என்று நினைப்பீர்கள். செவ்வாயும் வலிமை இழப்பதால் உடன் பிறப்புக்களை நீங்கள் அனுசரித்துச் சென்றால் தான் ஆதாயம் கிடைக்கும்.

மே மாதத்திற்கு மேல் பயணங்களால் பலன் உண்டு. இடமாற்றம், வீடு மாற்றம் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம். வருடக் கடைசியில் எதிர்பாராத தனலாபம் வந்து சேரும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகள் நிறைவேறவும், குடும்ப முன்னேற்றம் உருவாகவும் வைரவர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று தெசா புத்திக் கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் வாழ்வில் வளர்ச்சி கூடும். (முற்றும்)

**சிவல்புரி சிங்காரம்**

---

### மீள்குடியேற்ற பிரதேசங்களில்

# கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு விஷேட கொடுப்பனவு ஒன்றை வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த நிலையில் வடக்கின் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் அத்துடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் கற்பித்து வருகின்ற ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வவுனியா முகாம்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தில் குடியேறியுள்ள ஆசிரியர்கள் தினமும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறான ஆசிரியர்களின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு விஷேட கொடுப்பனவொன்றை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-6)

---

# குற்றத் தடுப்பு பிரிவின் அசமந்த போக்கினால் கைதிகள் பெரும் அசௌகரியம்

## தர்ஷிக்கா விமலசிறி

(கொழும்பு)

குற்றத் தடுப்பு பிரிவின் அசமந்த போக்கினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அனுராதபுர பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்ஷிக்கா விமலசிறி விசனம் வெளியிட்டுள்ளார்.

குற்றத் தடுப்புப் பிரிவின் நடவடிக்கைகளினால் சந்தேக நபர்களும் நீதித்துறையும் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கப்பம் கோரிய ஆறு பேர் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றின் போது குற்றத் தடுப்புப் பிரிவினரின் நடவடிக்கைகளை நீதவான் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

விசாரணைகள் தொடருவதாக தெரிவித்து சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்காத குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முடிவுறுத்த அதிக சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணை என்ற பெயரில் ஆண்டுக் கணக்கில் சந்தேக நபர்களை தடுத்து வைத்திருக்கும் செயற்பாடானது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் துரித கதியில் விசாரணைகளை நடத்தி வழக்குகளை முடிவுறுத்த ஒத்துழைப்பு வழங்குவதே காவல் துறையினரின் பிரதான கடமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசாரணைகளை நடத்தும் சிரேஸ்ட காவல்துறை அதிகாரிகள் நீதிமன்றில் ஆஜராகாது தமது கனிஸ்ட அதிகாரிகளை அனுப்பி வைப்பதனால் வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தூய்மையான எண்ணத்துடன் தூய்மையான உலகம்!!

சூரிய பகவானை வணங்கும் தைப்பொங்கல் திருநாளில் எங்களது சுற்றுச்சூழல், ஆடை அணிகள் போலவே தூய்மையான எண்ணங்களுடன் தூய்மையானதோர் உலகம் அமைக்க உறுதி கொள்வோம்.






தூய்மையான எண்ணத்தை உங்களுக்குத்தருவதுடன் ஆடைகளின் தூய்மையையும் பேணி இலங்கை இல்லதரசிகளின் மனம் கவர் தெரிவானது.

**இலங்கை இல்லதரசிகளின் மனம் கவர் முதல் தெரிவு தீவா டிடெஜண்ட் பவுடர்**

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010

## பொற்கால விடியலை காண்போம்

இதுவரை துயர்பட்ட காலமது போக
இத்தேசம் புதுயுகத்து விடியலைக் காண
நதிக்கரை விளைநிலத்து செழுமையைப் போல
வாழ்வினில் வசந்தத்து விடியலைக் காண
எது குறையும் இல்லாதெனும் மனநிறைவுறும்
இனியதோர் பொற்கால விடியலைக் காண
தைத்திங்கள் முதல் நாளில் எழுஞ்சூரியனே
தமிழின விடியலுக்காய் கதிர் விரிப்பாயே

அல்வாயூர் சி.சிவநேசன்

## பொங்கட்டும் புதுவாழ்வு

எழில் குலுங்கும் நெற்கதிர்கள் குதிர்கள் காணும்
ஈடில்லா அறுவடைநாள் பொங்கல்! வாட்டும்
இழி பனிப்பேய் ஒழிந்தோட இனிய மாற்றம்
ஏற்படுத்தும் திருநாளே பொங்கல்! நந்தம்
மழலையர்க்குக் கணுக்கரும்பைச் சுவைக்கத் தந்து
மகிழ்வூட்டும் பெருநாளே! பொங்கல்! இல்ல
அழகுமகள் மணக்கோலம் காண்பதற்கே
அச்சாரம் தரும் நாளே பொங்கல்! என்பேன்

பொங்கட்டும் தமிழ்ச் சாதி உரிமை வேட்கை
பொசுங்கட்டும் சாதிமத புராணக் குப்பை
தங்கட்டும் தமிழர் நலம் பூமியெங்கும்
தழைத்தோங்கி சிறக்கட்டும் தமிழர் வாழ்வு
மங்கட்டும் மறையட்டும் வன்முறைகள்
மலரட்டும் எப்போதும் நல்லமைதி
பொங்கட்டும்! இல்லத்தில் பால் பொங்கட்டும்
புதுவாழ்வு மலர்ந்த தென்று பால் பொங்கட்டும்.

அருளானந்தன்






# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010


தித்திக்கும் பொங்கலாய் திகழட்டும் வாழ்வு!

## லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்.

வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும். மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)

தொ. பே. இல :021 222 9053

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

## ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

சகல விதமான எசன்ஸ் வகைகள், கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் தயாரிக்கும் பொருட்கள், பிஸ்கட் வகைகள், வாசனைத்திரவியங்கள், ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

தொ. பே. இல: 021 222 2219

16A, கே.கே.எஸ். வீதி, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

தித்திக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## ஆர்.வி.ஜி மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல : 021 222 6806

அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

யாழ். கே.கே.எஸ் வீதியில் உதயமாகியுள்ளது

## ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடர்ஸ்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உருளைக்கிழங்குகளின் மொத்த விற்பனையாளர்

சில்லறை, மொத்த வியாபாரிகளுக்கு விசேட தள்ளுபடி வழங்கப்படும்

தரமான உருளைக்கிழங்குகளைப் பெற்று தரமாக விற்பனை செய்யுங்கள்

உங்களின் உயர்ச்சியே, எங்களின் மகிழ்ச்சி!

மளிகைப் பொருட்களையும் எம்மிடம் மொத்தமாக பெற்றுக் கொள்ளமுடியும்

## ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடர்ஸ்

இலக்கம் 589, 591, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 077 3366482, 077 3776949, 021 222 4579

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010

## நல்லை ஆதீன குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி



இன்று தைப்பொங்கல் திருநாள். தமிழர்களின் பெரு நாளாகிய இன்றைய தைப்பொங்கல் நன்னாள் சூரிய வழிபாட்டுக்குரிய தினமாகும். வயிறார உண்பதற்கு அரிசி தேவை. அந்த அரிசியைப் பெற வயலில் நெல் விளைய வேண்டும் நெல் விளைச்சலுக்கு சூரியபகவானின் இன்னருள் வேண்டும்.

சூரியனுடைய கதிர் வீச்சால் வயலில் நெற்கதிர் விளைகிறது. ஆகவே நெற்கதிர்களைத் தந்தருளிய சூரியனுக்குத் தை பிறந்த முதலாம் நாளில் பொங்கிப் படைத்து நன்றிக்கடன் செலுத்துவது தமிழர் மரபு.

"தைபிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள் ஆகவே இன்றைய தைப்பொங்கல் திருநாளில் எல்லாமக்களும் இன்னல்களிலிருந்து விடுபட்டு அமைதியும் சுபீட்சமும் நிறைந்த மங்களகரமான நல்வாழ்வு வாழ வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல கந்தப் பெருமானையும் வாழ்த்தி வணங்கி உளமாரப் பிரார்த் தித்து அருளாசிகளை வழங்கி உளம் மகிழ்கின்றோம்.

எல்லோரும் இன்புற்று பொங்கும் மங்களம் எங்கும் தங்கி அனைவரையும் நன்கு வாழ வகை செய்ய வேண்டுமென்று இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**ஆதீன முதல்வர் ,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

## தைத்திருநாளை வரவேற்போம்



தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற உன்னத வார்த்தையை உள்ளத்தில் இருத்தி தைத் திருநாளை வரவேற்போம். உழுது பயிர் செய்து பலர் உன்னத வழிசெய்யும் உழவர் பெருமக்களுக்கு எம் உள்ளத்தால் இந் நாளில் நன்றி சொல்வோம்.

பகல் தந்து ஒளிதரும் பகலோன் கதிரவனை வணங்கி வாழ்த்தி, இயற்கையின் மேன்மையைப் போற்றுவோம். இல்லந் தோறும் பொங்கிப் படையல் செய்து குடும்பமாக வழி பாடு செய்வோம்.

உறவினர், நண்பர்கள், அயலவர் இல்லம் சென்று அன்பைப் பகிர்ந்து நல்லாதரவை வளர்த்துக்கொள்வோம். உறவை இழந்து, ஊரிழந்து இடம்பெயர்ந்து அகம் நொந்து வாழும் அப்பாவி மக்களுக்கு ஆறுதல் சொல்வோம் .

எமது வளங்களை வாய்ப்புக்களை நன்முறைகளில் பயன்படுத்துவதற்கு வழி செய்வோம். எதிர்காலச் சந்ததியின் நன்மை கருதி பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாது காக்க ஏற்பாடு செய்வோம். சோர்ந்து விடாமல் மீளவும் எழுந்து நல்லன செய்வோம். அன்பர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் உரித்தாக்கட்டும்

**செஞ்சொற்செல்வர்**
**ஆறு .திருமுருகன்**

**தலைவர் ,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

## தைப்பொங்கல் பெருநாள் தமிழர்தம் பண்பாட்டு நன்நாள்

மக்களின் உயிர்த்தொழிலாகும் உழவுத்தொழிலுக்கும் வளர்ச்சிக்கும் சூரிய ஒளியே காரணம் என இன்று விஞ்ஞானிகள் கூறுவதைக் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடிகளான தமிழ் மக்கள் அன்றே சூரிய ஒளியினாலேயே தம் தொழில் வளம் பெருகும் என்னும் உண்மையைத் தெரிந்து ஆண்டிற்கு ஒரு முறை அறுவடை காலமான தைத்திங்களின் முதல் நாளிலேயே புத்தரிசிப் பொங்கலிட்டு முதலில் சூரியனை வழிபட்டு நன்றிப் பெருக்கோடு **தைப்பொங்கல்** பெருநாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அன்று முதல் கதிரவனுக்குப் பொங்கலிட்டு வழிபட்டதுடன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையான காளைகட்கும் பட்டிப்பொங்கல் பொங்கிக் கொண்டாடி வருவது தமிழர் தம் தனித்துவப் பண்பாடாகவுள்ளது. தைமுதல் நாளில் சூரிய பகவானுக்கும் இரண்டாம் நாளில் உழவுத் தொழிலுக்கே உறுதுணையான காளைகட்கும் பொங்கல் பொங்கி மகிழ்வதுடன் மூன்றாம் நாளில் கடைநாள் பொங்கல் என எல்லோரும் கூடிப் பொது இடங்களில் பொங்கல் விழா எடுப்பதுடன் ஜல்லிக் கட்டுப் போன்ற காளை மாட்டுப் பயிற்சிகள் விளையாட்டுகளிலும் ஈடுபடுகின்றார்கள். தமிழ் மக்களின் நன்றித் திருநாளாகக் கொண்டாடப்படும் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நன்நாளாக இன்று பெருமையுடன் போற்றப்படுகின்றது.



### புத்தாண்டுச் சிறப்புக்கள்

ஜனவரி முதலாம் நாளை உலகோர் ஒப்பக்கொண்டாடப்படும் புத்தாண்டு விழாவாகத் தமிழர்களும் கொண்டாடினாலும் தனித்துவப் பண்பாட்டுத் திருநாளாகவும் பெருநாளாகவும் தைத்திங்கள் முதல் நாளைக் கொண்டாடுவதுடன் உலகோர் கண் கண்ட தெய்வமான சூரிய பகவான் நன்றி உணர்வுடன் வழிபடும் நன்நாளாகக் கொண்டாடுவார்கள்.

தமிழ் மக்கட்குத் தைத்திங்கள் தனித்துவமானதாக தமிழ்ப் புத்தாண்டாக பொங்கல் விழாவாக உத்தராயண கால ஆரம்பமாக தை பிறந்தால் வழிபிறக்கும் என வாழ்வின் பல்வேறு சிறப்புக்களையும் எதிர்பார்த்துக் கொண்டாடும் பெருநாளாக அமைகின்ற தெனலாம்.

**நீர்வைமணி**

## பொங்கலோ பொங்கல்

இன்று தைப்பொங்கல் திருநாள். இனிப்பான சர்க்கரைத்தேனமுது பொங்கிப் படைத்து சூரிய வழிபாடு செய்கின்ற பொன்னான நன்னாள்.

தமிழ் மக்களின் பண்டிகையான தைப் பொங்கல் நன்றிக்கடன் செலுத்துகின்ற திருநாளாகக் கொள்ளப்படுகின்றது. வயலில் நெல் விளைச்சலுக்கு சூரிய பகவானுடைய கதிர்வீச்சு அவசியமாகின்றது. சூரியனுடைய ஒளிக்கதிர்கள் பட்டு நெற்கதிர்கள் விளைகின்றன. ஆகவே உண்பதற்கு நெல் மணிகளை உற்பத்தியாக்கித் தந்த சூரியனுக்குத் தை பிறந்த முதல் நாளிலேயே பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது தமிழர் மரபு; இஃது நன்றி கூறும் நற்பண்புமிக்க வழமையும் கூட.

ஒவ்வொரு நாளும் பொழுது புலர்ந்து விடியற்காலையில் சூரியனுடைய கதிர்வீச்சுக்களே நமக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றன. இன்றைய நாள் நல்லதாக அமைய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து நமது அன்றாடக் கடமைகளை ஆரம்பிக்கின்றோம்.

இன்று பிறந்திருக்கும் தைத்திருநாள் ஓர் இனிய நன்னாளாக அமைதல் வேண்டும். ஈழம் வாழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த மங்களகரமான இன்பவாழ்வு வாழ்ந்திட ஓர் ஆரம்பத் திருநாளாக இது திகழ்தல் வேண்டும். உழவர்கள் உழைத்து அந்த உழைப்பால் கிடைத்த நெல்லரிசியிலே பொங்கல் பொங்கிப் "பொங்கலோ பொங்கல்" என்று படைத்து ஒன்றாகச் சேர்ந்திருந்து உண்டு மகிழும் இனிய திருநாள் இந்தத் தைப்பொங்கல் நன்னாள்.

இற்றை நாள் வரை பட்ட துன்பதுயரங்கள் நீங்கப்பெற்று இனிமேல் 'இன்பமே எந் நாளும் துன்பமில்லை' என்று அப்பர் பெருமான் தேவாரத்திலே கூறியது போல இன்று முதல் மனைகள் தோறும் மங்களம் நிறைந்து மகிழ்ச்சி நிறைந்த இன்ப வாழ்வு மலரட்டும் என்று கடவுளை வணங்கிடுவோம்.

**இராசையா ஸ்ரீதரன்**

## துணை நிற்பாய் தை மகளே

புலர்ந்திட்ட பொழுதுடன்
"தை" மகள் பிறந்திட்டாள்
"தை"யலே தமிழ் மகளே
முழுநிலவாய் மிளிர்ந்தவளே
முக்கனியின் சுவை கொடுப்பாய்
முத்தமிழில் ஒலி கொடுப்பாய்

பிறந்த எம் மண்ணும்
து (து) றந்த எம் வசந்தமும்
பிரிந்த எம் சுற்றமும்
மீண்டும் எமையடைய
துணை நிற்பாய் தைமகளே



நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு

## வல்லமை தந்திடு பொங்கலே நீ

நல்லதே நடக்க வேண்டும் என்று
நாமெலாம் ஏங்கிக் காத்து இருக்கும்
அல்லலே சுமந்த எமக்கு ஆறுதல்
அளிக்கத் தமிழர் புத்தாண் டுடனே
நம்பிக் கையூட்டி மேலும் வாழ்வை
நல்ல பொங்களும் இன்று வந்தது
வல்லமை யோடு நாங்கள் தொடர
வளமெலாம் தந்திடு தைப்பொங் கலே நீ

வ.யோகானந்தசிவம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்
சாரங்கா நகை மாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6972
கிளை கொழும்பில் உதயமாகியுள்ளது
சாரங்கா ஜுவல்லரி
இல:55, செட்டியார் தெரு, கொழும்பு-11
T.P: 011 2434971 Fax: 011 2434071

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010

## அகில இலங்கை இந்து மாமன்றம் விடுக்கும் பொங்கல் வாழ்த்துச் செய்தி

மலரும் தைத்திங்கள் புலரும் பொழுததாக அமையப் பிரார்த்திப்போம் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் சார்பாக தலைவர் வி. கயிலாசபிள்ளை, செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்து மக்களின் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாக தைப் பொங்கல் சிறப்புப் பெறுகிறது. உலகில் இருள் நீக்கி ஒளி வழங்கும் ஓர் உன்னத சக்தியாகவும் மக்களுக்கு வாழ்வளிக்கும் தெய்வமாகவும் போற்றப்படும் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் மூலம் தைப்பொங்கலை எமது மக்கள் பக்தி பூர்வமாகவும் தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது நீண்டகாலப் பாரம்பரிய வழக்கமாகும். இந்நாள் தைமாதப் பிறப்பாகவும் அமைவது சிறப்புக்குரியதாகும்.

ஆனால் தமிழ் மக்கள் - எங்கள் உடன் பிறப்புக்கள் - கடந்த காலங்களில் அனுபவித்து வந்த வேதனைகளையும் சோதனைகளையும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அத்தகையதொரு துரதிஷ்டவசமான நிலை இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்பதை மறவாது இன்னமும் அதன் தாக்கத்தினால் வருந்தும் எங் களது சகோதர சகோதரிகளுக்கு உதவுவது எங்கள் கடமையாகும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பாரம்பரிய சொற்றொடருக்கு அமைய உரிய நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வைத்து தைத்திங்கள் வரவேற்கப்படுகிறது. மலரும் தைத்திங்கள் தமிழ் மக்களுக்கு வாழ்வில் ஒளிமயமான எதிர் காலத்துக்குரியதாக அமையவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனையாக இருக்கிறது. தமிழ் மக்கள் சுதந்திரத்துடனும் சுய மரியாதையுடனும் மட்டுமல்ல நிம்மதியாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழும் சூழ்நிலை ஏற்பட வேண்டும். அது நிரந்தரமாகவே அமையவேண்டும்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்து வரும் எங்கள் சகோதர சகோதரிகளுக்கு எங்களாலான நிவாரண உதவிக்ளை வழங்கி வந்திருப்பதுடன் அவர்களுக்காக மாமன்றத்தின் சார்பாக தயங்காது குரல் கொடுத்து வந்திருக்கிறோம். கடந்த சில மாதங்களாக எங்கள் மக்கள் பாரிய இடப்பெயர்வுகளுக்கும் பெரும் இன்னல்களுக்கும் ஆளாகியபோது பல்வேறு வழிகளில் அவர்களுக்கு உதவியிருக்கிறோம். வவுனியா நிவாரண முகாம்களில் தங்கியிருந்த எங்கள் மக்களுக்காக மாமன்றத்தின் சார்பாக பாரெல்லாம் வேண்டுகோள் விடுத்து உதவிகள் பெற்றுக்கொடுத்து வருகிறோம். இடம்பெயர்ந்த முதியோர்கள், மாணவர்கள், சிவாச்சாரியார்கள் ஆகியோருக்கு பல வழிகளிலும் உதவி வருகிறோம். இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதுடன் மாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள இரத்மலானை மாணவர் விடுதியில் அவர்களை இணைத்து பராமரிப்பதற்கான வசதிகளையும் செய்துள்ளோம்.

இடம்பெயர்ந்த யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக நிதியுதவி செய்து வருவதையும் குறிப்பிட விரும்புகிறோம். மாமன்றத்தின் வேண்டுகோளுக்குச் சாதகமான வழிகளில் உதவிய அரசாங்கத்திற்கும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் அறங்காவல் சபையினருக்கும் மனிதநேய நிதியத்திற்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி வரும் இந்து மக்கள் அனைவருக்கும் மாமன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்கள் சகோதர சகோதரிகள் அனுபவித்து வரும் துயரங்கள் மிக விரைவில் முழுமையாக நீங்கி அனைவரும் பூரண விமோசனம் பெற்று வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் சேர்ந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். துன்பப் படும் எங்கள் மக்களுக்கு விமோசனம் வேண்டி சகல இந்து மக்களுக்கும் தைப் பொங்கல் தினத்தன்று வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுமாறு மாமன்றத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம் என்றார்கள்.


அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

டயானா பிளாஸ்ரிக் தொழில்கம்




சகல விதமான மோட்டார் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்களும் சிறந்த முறையில் ஒட்டிக் கொடுக்கப்படும்

எம்மிடம்
என்ஜின் கவர்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

06, கனகசபை லேன்
சிவலிங்கப் புளியடி
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பே: 021 222 8680


## வாரீர் பொங்கிடுவோம்

அடுப்புக் கல்லிடையே
தென்னம் பூ விறகெதற்கு
மனத்தினில் எரிந்திடும் தீயுண்டு
வாரீர் பொங்கிடுவோம்.

பொங்கிட பசுப்பால் எதற்கு
தேற்றிட அணைந்திடா இதயத்தில்
வழிந்திடும் விழி நீர் எமக்குண்டு
வாரீர் பொங்கிடுவோம்.

பட்டாசு வெடிகள் எமக்கெதற்கு
வெடிக்கத் துடித்திடும் - வார்த்தை
வெடிகள் உதட்டினில் இருக்குது
வாரீர் பொங்கிடுவோம்.

பலகாரம் படையல் இங்கெதற்கு
எம் வாழ்வின் வஞ்சக வதை-தனை
கதை கதையாய் பகிர்ந்திட- உறவுண்டு
வாரீர் பொங்கிடுவோம்.

புதுப்புடவை அலங்காரம்-தான் - எமக்கு
அனல் காற்று புழுதி எம்மீது படியினும்
எழிலுறு அழகுடை மேனி எமக்குண்டு
வாரீர் பொங்கிடுவோம்.

ஆதவா எம் வாசல்கள் தோறும்
உன் ஒளியினைத் தந்தே அருள்புரிவாய்
உறுதி கொண்டே
புதுவாழ்வு அமைத்திடுவோம்
வாரீர் பொங்கிடுவோம்.

இரா. தர்மரட்ணம்
நெடுந்தீவு-12

## பூரித்து நிற்கிறோம்

பொங்கல் பிறக்குது என்பதால்
போகவே விட்டனர் ஊரிற்கு
எங்கள் வாழ்வதும் சிறந்திட
எண்ணியே நாங்களும் வந்தோம்
வீடதில் பூட்டதும் இல்லை
வேலியில் கிடுகும் இல்லை
மாடது துள்ளியே திரியுது
மந்துகள் வளர்ந்தது தெரியுது.
பக்க வீட்டுப் பாக்கியம்
பலநாள் முன்னதாய் வந்தவர்
தக்க துணையாய் கிடைத்ததில்
சற்று நாம் அமைதி ஆனோம்



பாக்கிய அக்கா வந்தெமைப்
பரிவுடன் உதவி நின்றார்
ஆக்கிய உணவிலே எங்களின்
அரும் பசி போக்கி விட்டார்.
அன்றிர வக்கா வீட்டினில்
அயராத் தூக்கத் திருந்தோம்
இன்றோ எம்வீடு ஏற்றதாய்
இயலும் வரையும் அமைத்தோம்.
முற்றம் படர்ந்த புல்லினை
முழுமையாகவே செதுக்கவே
கற்கள் மூன்றுமே மிதந்தன
கண்டதில் பூரித்து நிற்கிறோம்.

கவிஞர் -துரையர்


74ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இன்றைய தைத்திருநாளில் மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

புகைப்படத்துறையில் 74 வருடங்களாக வாடிக்கையாளர்களுக்கு அதி சிறந்த சேவைகளை வழங்கி வரும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சிறந்த சேவைகளை வழங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குகன் ஸ்ரூடியோ
பருத்தித்துறை
T.P-021 2263218

உரிமையாளரும்
ஊழியர்களும்

(C-4210)

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010


இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்



ஸ்ரீகணேஷ் பல்நோக்கு கண்ணாடியகம்

இல 546,566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2488

கிளைகள்:
91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி.
86, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

பொங்கலோ! பொங்கல் புதுப்பானையில் பொங்கலோ! பொங்கல்!

V.S.P லங் ஒயில்

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 0212224135, 0212229165

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

சகல பாமசி & குறோசரீஸ் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

றூபா பன்முக வர்த்தகம்

இல.104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:021 222 2479

அனைவருக்கும் தித்திக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

யாழ்.குடாநாட்டிலிருந்து
உலகின் எப்பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும்
பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

S.V.N Enterprises

உள்நாட்டு வெளிநாட்டிற்கான

யாழ்.-கொழும்பு
கொழும்பு-யாழ்.

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி,
பிரான்ஸ், அவுஸ்திரேலியா,





நோர்வே, இத்தாலி, டென்மார்க்,
அமெரிக்கா, நியூசிலாந்து,
நெதர்லாந்து, பங்களாதேஷ்,
சிங்கப்பூர், டுபாய், இந்தியா.

துரித தபால்கள்
பொதிகள் சேவை



உள்நாடு, வெளிநாடுகளுக்குக் கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் DVD பிரதிகள், CD என்பன ஏற்றுக் கொள் ளப்படும்.

S.V.N Enterprises

இல.14, நவீன சந்தை,
மேல்மாடி, சாவகச்சேரி
Tel:- 021-5672015
021-5672016/077 7279691

யாழ் ரெக்ஸ்
யாழ்ப்பாணம்.
Tel:-021-222 9951/021-5672018

யாழ் ரெக்ஸ்
சாவகச்சேரி
Tel:-021 -5672017

(4144)

பிறக்கட்டும் தைத்திருநாள் மலரட்டும் வாழ்வு!

MACKSONS PAINTS WORLDWIDE

வர்ண உலகில் புரட்சி

Multilac® www.multilac.com



உயர்தரச் சான்றிதழ்களுக்கு
இப்போது அதிகம் செலவு
செய்யாதீர்கள்.

கந்தவேலன் வர்ணவங்கி

KANTHAVELAN COLOUR BANK

WE COLOUR THE WORLD

110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2822

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010

பொங்கல் வாழ்த்துக்கள்
இளவரசி சேலைச்சோலை
(பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்)
ELAVARASI TEXTILE
(Specialist in Wedding Sarees)
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
Tel : 021 222 2503
57, New Market,
Jaffna.

பொங்கல் வாழ்த்துக்கள்
சீமாட்டி புடவைக் கடல்
கிளைகள் - மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மார்க்கெற்,
இல 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
இல. 15, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 2199 பக்ஸ் - 021 222 2102

## தை பிறந்தால் வழி பிறக்கும்

பொங்கலோ பொங்கல் தை தை
பொங்கலோ பொங்கல்
தை பிறந்தது இதோ இன்னிக்கு
வழி பிறந்தது இந்தக் கன்னிக்கு
காலம் கனியுது தாலி கட்டிக்கோ
வாழ்வு மலரும் என எண்ணிக்கோ

பொங்கலோ பொங்கல்....

தோழி 1 :முற்றிய நெற்கதிர் போல் தலை நாணித் தொங்குவதெதனாலே
தோழி 2: நெற்றியில் குங்குமம் ஏறிடும் நாளை சிந்தித்ததனாலே
தோழி 1: வெற்றிலைக் கொடியென தன் நிலை தளர்ந்து நிற்பது எதனாலோ
தோழி 2 : பற்றிப் படர்ந்திட பாவையின் ஏக்கம் பலித்திடுமினிநாளே

பொங்கலோ பொங்கல்.....

தோழி 1:பஞ்சாங்கத்தை கொஞ்சம் பாருங்கடி நேரத்தை காலத்தை குறியுங்கடி
தோழி 2: பழைய சாத்திரம் ஏதுக்கடி மனதில் பொருத்தம் போதுமடி
தோழி 1: பந்தல் தோரணம் போடுங்கடி பலகாரம் சுவையாய்ப் பண்ணுங்கடி
தோழி 2: வாழை கமுகுவை நாட்டுங்கடி வாழ்வு வளம் பெற வாழ்த்துங்கடி

பொங்கலோ பொங்கல்....

கனக நமநாதன்
திருநெல்வேலி.

## விவசாயி தன் ஆதா-ரமேபோற்றி

உலகிற்கு உயிரூட்டி ஒளியூட்டும்
சூரியனே! நின்பாதம் போற்றி
நிலம்திருத்தி நீர்பாய்ச்சி உயிர்காக்கும்
விவசாயி தன்ஆதா ரமே போற்றி
அலகிலா நன்மை புரிந்திடும்
ஆதித்தனே போற்றி உழவரையும்
நலநலம் நல்குமுன் னையுமித்தைப்
பொங்கல் நாளில் நாம் போற்றுகிறோம்

பா.பாலச்சந்திரன்
மயிலணி

## சமத்துவம் மலரவே
## தைப்பொங்கல் பொங்கட்டும்

தைப்பொங்கல் பொங்கட்டும்
சமத்துவம் மலரட்டும்!
அன்பு நெறி பொங்கட்டும்
அகிம்சை நெறி ஓங்கட்டும்!
இங்கிதங்கள் பொங்கட்டும்
ஏக்கங்கள் கலையட்டும்!
புரட்சிகள் பொங்கட்டும்!
பூமி தழைக்கட்டும்!

பக்தியுடன் பானை வைத்துப்
பாற்பொங்கல் பொங்கட்டும்!
புத்தரிசியோடு புதுப்பால் கலந்து
பொன் வெல்லம் பொங்கட்டும்!
சர்க்கரையோடு தேன் பயறுஞ் சேர்த்து
மெத்தக் கலந்திங்கு பொங்கட்டும்!
மத்தாப்புடனே வாண வேடிக்கைகள் காட்டி
மகிழ்வுடனே மக்களனைவரும் பொங்கட்டும்!

செல்வநாயகம் ரவிசாந்
வீரமனை,குப்பிளான்.

## இன்பப் பொங்கல்

தை மகளே உன் வரவால் நல்வழிகள் பிறந்திடணும்
தரணியிலே சாந்தியொடு சமாதானம் மலர்ந்திடணும்
ஆதவனே உன்கரங்கள் எமைஅனைத்துக் காத்திடணும்
அவனி மக்கள் மனங்களிலே சந்தோஷம் பொங்கிடணும்
ஏர் பிடித்த உழவர் எல்லாம் ஏற்றமுடன் வாழ்ந்திடணும்
சர்க்கரையும் கரும்பும் போல அவர் மனமும் இனித்திடணும்
போர் மேகம் கலைந்தெங்கும் மழை மேகம் சூழ்ந்திடணும்
பார்தனிலே தமிழர் எல்லாம் பரவசமாய் பொங்கிடணும்

நா. கீதாகிருஷ்ணன்
நயினாதீவு - 08

## தைமகளே அசைந்துவாராய்

தென்னைகளும் கதலியுடன் குலைகள் நீட்ட
தேவதருவாம் தாலம் பயன்நிறைப்ப
கன்னல் சுவை இருள்சாலிக் கதிர்கள் தாழ
தேன்சுவை கொள் மாங்கனிகள் கனிந்து வீழ
வன்னப்பூங்கு ஈச்சமரம் பசுமை காட்ட
புகையிலையும் மிளகாயும் பொலிந்து தாழ
சொர்ணநிற வடிவுடைய தைமாதத்தாயே நீயும்
பொலிவுடனே மகிழ்ச்சியுடன் அசைந்து வாராய்

கவிமணி கந்தமுருகேசதாசனார்

அன்பர்கள், நண்பர்கள் ,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
புதுப்பொலிவுடன்
அழகுக்கு அழகு சேர்க்கும் அசல் 22
கரட் தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
பிரம்யா
நகை மாடம்
யாழ். வீதி,
ஆலடிச் சந்தி மானிப்பாய்.
(சி/4221)

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ,
வியாபாரிகள், கட்டட ஒப்பந்தக்காரர்கள், மின்
இணைப்பாளர்கள் யாவருக்கும் எமது இதயம்
கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.
மலர்ந்திருக்கும் தைத்திருநாளில் சாந்தி சமாதானம் மலர
எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக என
வாழ்த்துகிறார்கள்.
சுந்தர்சன்
மானிப்பாய்
சுந்தர்சன் உரிமையாளரும்,
ஊழியர்களும்.
மானிப்பாய்.
யாழ். வீதி,
மானிப்பாய்.
தொ.பே.021 2229984
(சி/4220)

# நெருக்கமான போட்டியின் முடிவு தமிழர் வாக்குகளில் தங்கியுள்ளது

## ஐ.நா. நிறுவனம் ஆய்வு



பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களும் புதிதாக இலங்கைக்குத் திரும்பியவர்களும் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வின் மனிதார்ந்த விவகார ஒருங்கிணைப்புச் செயலகத்தின் ஓர் ஆய்வு நிறுவனமான இரின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரின் நிறுவன ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற போரை அடுத்து இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 80 ஆயிரம் தமிழர்களில் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருப்போரும், சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கக் கூடியதாக இருக்குமா என்ற சந்தேகம் நீடிக்கிறது.

இது தொடர்பாக இரின் செய்தி நிறுவனத்துக்குத் தகவல் வெளியிட்ட நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான அமைப்பின் (People's Action for Free and Fair Elections - PAFFREL) பிரதம நிறைவேற்று அதிகாரி றோகண ஹெட்டியாராச்சி, இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பலர் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை. வாக்காளர் அட்டைகளுக்காக சுமார் 35 ஆயிரம் பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

அதேவேளை கபே எனப்படும் (Campaign for Free and Fair Elections) மற்றொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று அதிகாரியான கீர்த்தி தென்னக்கோன், யார் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்பதைக் கண்டறிவது மிகவும் சிக்கலானதாக இருக்கிறது.

சிலர் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருந்து விண்ணப்பித்துள்ளனர். ஆனால் அவர்கள் அண்மையில் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். அவர்களின் வாக்காளர் அட்டைகள் முகாம்களுக்கே அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் வாக்களிப்பு நிலையங்களும் அங்கேயே அமைக்கப்படவுள்ளன. இது முக்கியமான ஒரு பிரச்சினையாகவுள்ளது என்று கூறியுள்ளார்.

கபே அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்தித்துத் தரவுகளைச் சேகரித்த போது அவர்களில் பெரும்பாலானோர் வாக்களிக்க விண்ணப்பிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

கனகராயன் குளத்தில் குடியமர்த்தப்பட்ட 56 குடும்பங்களைச் சந்தித்தபோது அவர்களில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்தவர்களே வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர்.

வன்னியின் ஏனைய இடங்களிலும் இது போலவே சிறிய எண்ணிக்கையானோரே பதிவு செய்துள்ளனர்.

இவர்கள் வாக்களிக்க வேண்டுமானால் வாக்களிப்பு நிலையங்களுக்கும் அங்கிருந்தும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி மெனிக் பாம் (மாணிக்கம் பண்ணை) முகாமுக்குச் சென்றிருந்த போது அங்கிருந்தவர்கள் எப்படி வாக்களிக்கப்போகிறார்கள் என்பது தெரியாமலே உள்ளது.

தாம் பல படிவங்களை நிரப்பிக் கொடுத்ததாகவும் ஆனால் அதற்குப் பிறகு எந்தத் தகவலும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் அங்குள்ள மக்கள் கூறினர்.

அங்கு டிசெம்பர் மாதக் கடைசியில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேர் இருப்பதாக அரசாங்கத் தகவல் கூறுகிறது.

இரு தசாப்தப் போரினால் வன்னியில் வாக்காளர்கள் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

1989 இற்குப் பிறகு இங்கு சரியான முறையில் வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.



இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்கச் செல்லும்போது வாக்காளராகப் பதிவு செய்யவில்லை என்று இலகுவாக மறுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 21 மில்லியன் வாக்காளர்களில் 14 வீதமான தமிழர்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டாதிருப்பது வாக்கு மோசடிகள் இடம்பெற வழிவகுக்கும் என்று அச்சம் வெளியிட்டுள்ளார் (PAFFREI) அமைப்பின் அதிகாரி ஹெட்டியாராச்சி.

அங்கு இன்னமும் பதற்றமான சூழலே



உள்ளது என்று கூறும் அந்த அமைப்பு அந்தப் பகுதிகளில் அதிக அளவிலான உள்நாட்டு வெளிநாட்டுப் பணியாளர்களைத் தேர்தல் கண்காணிப்பிற்கு அனுப்ப உள்ளதாகவும் கூறியுள்ளது.

மேலும் பிரதான வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் வடக்கிலுள்ள தமிழர்களின் வாக்குளிலேயே குறிவைத்துள்ளனர்.

அது தேர்தல் முடிவுகளில் முக்கியமானதாக அமையும் என்று கருதப்படுகிறது.

போர் முடிந்த பின்னர் நடைபெறும் இந்தத் தேர்தலில் கடும் போட்டி நிலவுவதால் ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

நெருக்கமான போட்டி எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் தமிழர்களின் வாக்குகள் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

ஆனால் அவர்கள் சரத் பொன்சேகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ என இரண்டுபட்டு நிற்கிறார்கள் என்று கூறுகிறார் தேசிய சமாதானப் பேரவையின் (National Peace Council) பணிப்பாளரான ஜெகான் பெரேரா.

இரு பிரதான வேட்பாளர்களுமே ஆதரவு கோரிக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி - மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்துள்ள சரத் பொன்சேகாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடந்த பேரணியில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ - போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கை மீளக் கட்டியெழுப்பி மேம்படுத்தப்போவதாக வாக்குறுதி கொடுத்துள்ளார் என இரின் நிறுவனத்தின் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.


## 1ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அமரர்

செல்லையா கந்தசாமி

(கந்தரட்ணம் மாஸ்டர்)

ஓய்வுபெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்)

பிறப்பு: 17-07-1921

இறப்பு: 25-01-2009



என்றும் உம் நினைவுகளைச் சுமந்து வாழும் உறவுகள்.

பிரிவால் துயருறும்

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

புதிய ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
வட்டு தெற்கு.
வட்டுக்கோட்டை.

(C-4219)


# மக்கள் விட்டுச்சென்ற உடமைகள் யாவும் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்

## ஆனந்த சங்கரி தெரிவிப்பு

வன்னியில் மக்கள் விட்டுச் சென்ற உடமைகள் யாவும் அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

வன்னியில் போரின் போது இடம் பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் முதற்கட்டங்களில் தங்கள் வீட்டுக்கூரைகள் உட்பட பல பெறுமதியான உடமைகளை தங்களுடன் இடம்பெயரும் பகுதிகளுக்கு எடுத்துச் சென்றனர். வன்னியின் மேற்குப் பகுதிகளிலிருந்து இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் வன்னியின் கிழக்குப் பகுதிகளான தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள அவர்களின் நண்பர்கள், உறவினர்களின் காணிகளிலேயே பெரும்பாலும் உள்ளன.

பின்னர் குறிப்பிட்ட இப்பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து செல்கையில். கைகளில் கொண்டு செல்லக்கூடிய பொருட்களை மட்டுமே எடுத்துச் சென்றனா அந்தளவிற்கு கடுமையான எறிகணை வீச்சுக்கள் அவ்வேளைகளில் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாக அவர்கள் மாத்தளன் தொடக்கம், முள்ளிவாய்க்கால் வரையிலான பகுதிகளில் தங்கியிருந்த போது வெறும் தறப்பாள் கூடாரங்களே எஞ்சியிருந்தன. கடந்த வருடம் மே மாதம் 18 ஆம் திகதியுடன் வன்னியிலிருந்து மக்கள் அனைவரும் வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்துவிட்டனா

தற்போது வன்னிப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்ற நிலையில் நண்பர்கள், உறவினர்கள் காணிகளில் விட்டுச் சென்ற அவர்களின் உடமைகளை மீளப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். இம்மக்களின் கைவிடப்பட்ட உடமைகளை மீளக் கையளிக்க அரசாங்கமும் படைத்தரப்பும் உரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

# சுயாதீனமான ஓர் ஜனாதிபதியாக சரத் பொன்சேகா செயல்படுவார்

## லால்காந்த தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா ஓர் சுயாதினமான ஜனாதிபதியாக செயற்படுவார் என ஜே.வி.பி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றி பெறுவது உறுதி செய்யப்பட்டு விட்டதாகவும், பல்வேறு மாற்றங்களை மக்கள் எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கை தாதியர் பேரவை தொழிற் சங்கக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு எதிர்க்கட்சிகள் உத்தேசித்துள்ளதாகவும் சர்வகட்சி அமைச்சர் குழாம் ஒன்றுடன் சுயாதீன ஜனாதிபதியாக ஜெனரல் சரத் பொன்சேகா ஆட்சி நடத்துவார் என லால்காந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைவாக 17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதீத அதிகாரங்களை கட்டுப்படுத்த முடியும் என்றும் அத்தோடு ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சில ஊடகங்கள் நடுநிலையானவை போன்று தோற்றமளித்த போதிலும் பக்கச் சார்பாக செயற்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அம்பலப்படுத்த எந்தவொரு ஊடகத்திற்கும் தைரியமில்லை எனவும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைத்தால் அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவதில் சிக்கல் இருக்காதென்றும் தெரிவித்துள்ள அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பதவி பெயரளவுப் பதவியாக அமையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)




# என்னை நீங்கள் நம்புகின்றீர்கள் உங்களை நான் நம்புகின்றேன்

## மத்துகமவில் ஜனாதிபதி



இந்த நாட்டின் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் தேடிவரும் யுகத்தை ஏற்படுத்துவோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டம் அமைச்சர் குமார வெல்கமவின் ஏற்பாட்டில் மத்துகம விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனை 2 தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பல நிவாரணங்களை நாட்டு மக்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அரசாங்க ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும். எமக்கு பொய் வாக்குறுதிகள் கொடுக்கும் பழக்கம் கிடையாது. செய்வதையே சொல்லும் ஒரே அரசியல் தலைவராகவே நான் விளங்குகின்றேன். என்னை நீங்கள் நம்புகின்றீர்கள். நான் உங்களை நம்புகின்றேன்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அரச சேவையை சீரழிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. எவருக்குமே தொழில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. நாம் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்த அதேநேரம் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்திருக்கின்றோம். இதனை நாட்டு மக்கள் அறிவர். நாம் கிராமங்களையும், நாட்டையும் பாதுகாத்துள்ளோம். எம்மில் சேற்றுப் படிவுகள் கிடையாது. எம் கரங்களில் இரத்தக் கறையும் இல்லை. வஞ்சம் தீர்க்கும் அரசியல் நாட்டுக்குச் சரி வராது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (2-6)

# மஹிந்தவும், சரத்பொன்சேகாவும் மேலைநாடுகளின் முகவர்கள்

## விக்கிரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் மேலை நாடுகளின் முகவர்கள். அவர்களை நம்பி மக்கள் ஏமாற்றமடைந்து விடக்கூடாது என கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் விக்ரமபாகு கருணாரட்ன ரத்மலானை - கம்கரு செவன நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஏராளமான தமிழ் மக்களைக் கொன்றொழித்த இவர்கள் இருவரும் இன்று ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (2-6)



# தேர்தலுக்காக யுத்த வெற்றி பிரசாரம் பொருளாதார யுத்தம் தொடர்பில் மௌனம்

## ரில்வின் சில்வா



(கொழும்பு)

அனுபவம் வாய்ந்த தலைவராக தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளாந்தம் 191 இலட்ச ரூபாவினை செலவு செய்வதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேர்தலை முன் கூட்டி நடத்த வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த வெற்றி ஈட்டப்பட்டுள்ள காலத்தில் தேர்தலை நடத்தி அரசியல் ரீதியான இலாப மீட்டவே ஜனாதிபதி முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அக்குரஸ்ஸ மெலவ்வ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன் றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதிக்கு வாக்களிக்குமாறு கோரும் நடிக, நடிகையரை கலைஞர்களாக நோக்க முடியாது எனவும் அவர்களை கலகக்காரர்களாகவே நோக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத யுத்தம் வெற்றி கொள்ளப் பட்டதாக பிரசாரம் செய்துவரும் அரசாங்கம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார யுத்தம் தொடர்பில் மௌனம் சாதித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-6)



டெல்கொடவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் ஜெனரல் சரத் பொன்சேகா உரையாடுவதை படத்தில் காணலாம்

# தேர்தல் சட்டங்களை மீறிய பலர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிய 187 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறுதல் தொடர்பில் இதுவரையில் 456 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இதில் ஜே.வி.பி. 114 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 79 முறைப்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது பொலிஸார் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பது தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

அதில் சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சட்டவிரோத தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுமாறு கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனாலும் அழுத்தங்களுக்கு அணி பணியாது பக்கச் சார்பற்ற முறையில் தேர்தல் கடமைகளை முன்னெடுக்குமாறு சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தபால் மூல வாக்களிப்பின் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன

நேற்று முன்தினம் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பின் போது முறைகேடுகள் பல இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தபால் மூல வாக்களிப்பின் போது வாக்காளர்களுக்கு தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது முறைகேடுகள் தொடர்பில் நாடு முழுவதிலும் 23 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகள் அமைப்பின் சிவில் மற்றும் அரசியல் விவகார செயலாளர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

மேலும் வாக்குச் சீட்டுக்களை காண்பிக்குமாறு சில வாக்காளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# தைப்பொங்கல் சிறப்புமலர்-14.01.2010

அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்



திருமணப் பட்டுப் புடவைகளுக்கும்
நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

18A ,நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ. பே: 021 222 5679

சொகுசுவான்

மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்-கொழும்பு-யாழ், யாழ்-வவுனியா-யாழ்.
குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை

**யோகாஸ் கொமினிக்கேசன்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை தொ. பே: 021 321 5270

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்



## ரூபி நகை மாளிகை

111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2828
021 222 9038

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

## அற்லஸ் முகவர்களும் ஏக விநியோகஸ்தரும்



மாணவர்களுக்குரிய எழுது கருவிகள், Atlas,AB, Galaxy, அப்பியாசக் கொப்பி வகைகள், திருமண வாழ்த்து, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் மற்றும் கொம்பியூட்டர் றிபன்ஸ்,லேசர் பிறிண்டர்,ரோனர் வகைகள்,காட்றிச் வகைகள் ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## பேப்பர் ஹவுஸ்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P -021 222 5343

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

பலசரக்குப் பொருட்கள், மிக்சர் தயாரிப்பிற்கான பொருட்கள
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஜெகன் களஞ்சியம்

இல.285, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

## பொங்கலோ பொங்கல்



வாசலில் கோலமிட்டு
வாழை மரம் தொடுத்து
சூரிய தேவனே உனை அழைத்து
பொங்கலோ பொங்கல் என
உனைப் புகழ்ந்து பாடும்
இந்நாளை எனக்கு
திருநாளாய் அமைத்திடு!

சித்தூர் K.விஜயகாந்தன்

## சரவணா புடைவையகம்

நல்லூர்

அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




தைப்பொங்கலை முன்னிட்டு மலிவு விற்பனை

**31.01.2010 வரை மட்டும்**

- இந்தியன் சீக்குன்ஸ் சாறி 1900/=
  Full Worked
- இந்தியன் திரட்வேக் சாறி 1800/=
  Full Worked
- இந்தியன் சில்க்சாறி 650/=
  (official Saree)
- இந்தியன் கொட்டன் சாறி 850/=
  (official Saree)
- இந்தியன் கொட்டன் சாறி 1500/=
  (Rich cotton vijayalaksmy 6.20m)
- இந்தியன் சில்க் பஞ்சாபித்துணி 1000/=
  (No.1 Special quality Gurukupa)
- இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி
  1300/= - 2400/= வரை
  (Rich cotton special quality)
- பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி 700/=
  (லைனிங் தேவை இல்லை)

மற்றும் இந்தியன் சாறிகள், பஞ்சாபித் துணிகள் ஏராளம்! ஏராளம்!! மிக மிக மகத்தான விலைக் கழிவில் உள்ளது.

"வாருங்கள் வந்து பாருங்கள்"

**Saravana Tex**

526, பருத்தித்துறை வீதி; நல்லூர் (பின்வீதி)
சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஏழு நாட்களும் காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை கடை திறந்திருக்கும்

தித்திக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

## பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம்

**PILLAIYAR OFFSET PRINTERS**
a graphic arts industry

நவீன தொழில்நுட்பத்தினை யாழ்.மண்ணில் முதன் முதலில்
அறிமுகப்படுத்திய அனைத்துவளங்களும் உள்ள நிறுவனம்.
இறப்பர் முத்திரை, கூல் லமினேசன் குறைந்த செலவில்
தரமான அச்சுப்பதிவு செய்ய நாடுங்கள்



**பிள்ளையார் அச்சகம்**

679, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

எல்லா மக்களையும் சில நாட்களுக்கும், சில மக்களை எல்லா நாட்களுக்கும் முட்டாளாக ஆக்க முடியும். ஆனால் எல்லோரையும் எப்போதும் முட்டாள்கள் ஆக்க முடியாது.

–ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி

## மகிந்தவா?–பொன்சேகாவா? ஜனாதிபதி முடிபு தெரியாத வெற்றிதரும் பரிசுகள்

இலங்கையின் அரசியல் பலவீனங்களை நினைக்கும் போதெல்லாம் இலங்கை மக்கள் பரிதாபத்திற்குரியவர்களாகவே காட்சி தருவர்.

அரசியல்வாதிகள் காலத்திற்கு காலம் காட்டும் பூச்சாண்டி வித்தைகளில் இந்த நாட்டின் புத்தி ஜீவிகள் கூட மயங்கிப் போகும் பரிதாபம் எதிர்கால ஆரோக்கியத்தின் மந்த நிலையையே சுட்டி நிற்கிறது.

நடைமுறைக்கும் ஜனநாயகத்திற்கும் ஒவ்வாத சட்டமூலங்கள், அரசியல் யாப்புகள், பின்னாளில் அவை தருகின்ற குழப்பங்கள், அதற்காக நீதி மன்றங்களில் வழக்குகள் இப்படியே சிக்கல்களை உருவாக்கி அந்த சிக்கல்களை விலக்குவதில் சிந்தனையைச் செலவிடும் 'மடமைத்தனம்' இன்னும் விடுபடுவதாக இல்லை.

இதன் ஒரு அங்கமே இனப்பிரச்சினையாகும். எதையெடுத்தாலும் அதற்குள் தமிழர்–சிங்களவர் என்ற இனவாத அடையாளங்களை இனங்காண முற்படும் எண்ணம் இலங்கையர்களின் குருதியில் கலந்த கூறாகிவிட்டது.

அபிவிருத்தித் திட்டமாகினும் சரி, அரசியல் யாப்பாயினும் சரி எல்லாமே பேரினவாதத்தைக் காக்கும் கரங்களாகவே ஆக்கப்படுகின்றன.

நாம் இலங்கையர்கள். இலங்கையர்கள் இலங்கையில் சமத்துவத்துடன் வாழும் போதே இந்த நாடு மேன்மை அடையும் என்ற நினைப்பு ஆட்சி பீடங்களிலும், மதவாதிகளிடமும் அறவே யில்லை.

ஆட்சியாளர்களிடம் இல்லாதவற்றை மதபீடங்களில் காணமுடியாதவற்றை பாடப்புத்தகங்களில் எழுதி அதனை மாணவர்களுக்கு போதித்து நாட்டில் சமத்துவம் பேணுவது என்பது சரிவராத விடயமாகும்.

நீதி, நேர்மை, நியாயத்துவம், சமத்துவம் என்ற அனைத்துமே ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டு மக்களுக்கு கையளிக்கப்படவேண்டியவை.

உலகில் உயர்ந்த நாடுகள்–மனித உரிமைகளை மதிக்கின்ற நாடுகள் அனைத்தையும் எடுத்தாய்ந்தால் அந்த நாட்டின் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த நேர்மைத்தனமே அந்த நாடு முழுவதிலும் வியாபகம் பெற்றுள்ளன.

ஆபிரகாம் லிங்கன் ஐம்பது கிராம் தேயிலையில் காட்டி நீதியால் அமெரிக்க தேசம் உன்னத வளர்ச்சிகண்டது. காந்தியடிகள் காட்டிய அகிம்சை பாரததேசத்தை ஒற்றுமைப்படுத்தியது.

ஆனால் எங்கள் நாட்டில் எங்கும் ஊழல் குற்றச்சாட்டுக்கள். ஊழல்கள் நிரூபிக்கப்பட்டாலும் அதற்கும் அசையாமல் நின்று பிடிக்கும் சட்டவாக்கங்கள். நிலைமை இதுவாயின் எங்ஙனம் நீதி பிழைக்கும்?

இப்போது கூட தேர்தல் வேகத்தில், பதவி மோகத்தில் தமிழருக்கு கிடைக்கின்ற சலுகைகள்,

உயர்பாதுகாப்பு வலய உடைப்புகள், ஏ–9 பாதையின் பயணங்கள் மீள்குடிமர்வின் துரிதங்கள்,

எல்லாம் மகிந்த–சரத் பொன்சேகா போட்டியில் கிடைத்த புண்ணியங்கள். பேச்சு வார்த்தையால், கைஉயர்த்தி ஆதரவு கொடுத்தமையால், ஒப்பந்த உடன்படிக்கையால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரைகளால் பெறமுடியாதவற்றை மகிந்தவா–சரத் பொன்சேகாவா என்ற முடிபு தெரியாத வெற்றி ஒருகணத்தில் பெற்றுத் தருகின்றது.

இறைவா! எல்லாம் உன்செயல் என்பதைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே!

# அமெரிக்காவுடன் உறவு; ஈரான் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு

## மகிந்தவின் கொள்கை என்கிறார் டிலான்

(கொழும்பு)

மகிந்த சிந்தனையின் பிரகாரம் அமெரிக்காவுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் அதேவேளை ஈரானை ஒரு போதும் பகைத்துக்கொள்ளமாட்டோம். ஈரானுடன் வலுவான உறவைப் பேணுவோம். அதேபோன்று இந்தியாவுடன் நெருக்கமான உறவைப்பேணுகின்ற அதேவேளை பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்போம்.

ஒரு நாட்டுக்குத் தேவைப்படுகின்றது என்பதற்காக மற்றொரு நாட்டுடன் முரண்படமாட்டோம் என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

கடந்த கால வேலைத்திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றிய நிலையில் நம்பிக்கையான மாற்றத்தை ஏற்படுத்தியவர்களாக மக்கள் மத்தியில் வருகின்றோம். நாட்டின் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம்.

ஆனால் நாங்கள் மேற்கொண்ட மாற்றம் சிறந்த பயனை அடைந்துள்ள நிலையில் எதிரணியினரும் மாற்றத்தை ஏற்படுத்தப்போகின்றார்களாம். அதாவது பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுகின்றது.

நாட்டின் ஒரு சில துறைகளில் மேலும் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியுள்ளது. ஊழல் மோசடி கட்டுப்படுத்தல் விடயங்களில் மேலும் முன்னேற்றத்தைக் காண வேண்டியுள்ளது. தற்போது அந்தத் துறையில் முழுமையான கவனத்தைச் செலுத்தவேண்டும்.

எமது ஜனாதிபதி இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் முதலாவதாக ஊழல் மோசடி தடுப்புத் தொடர்பான சட்ட மூலத்தையே பாராளுமன்றத்துக்குக் கொண்டு வருவார்.

ஊழல் மோசடி ஒழிப்புத்துறைக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் நோக்கில் ஏற்பாடுகள் அமையும்.

மேலும் அரச நிறுவனங்களில் ஊழல் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கில் சுயாதீன புத்திஜீவிகள் குழு ஒன்றும் அமைக்கப்படும். மூன்று மாதங்களுக்குள் இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றார். (2-6)

## எத்தனையோ தை பிறந்தும் இன்னும் எமக்கு வழி பிறக்கவில்லையே

### அகில உலக சைவக்குருமார் சம்மேளனத் தலைவர்

இந்து தர்மத்தில் பண்டிகைகளின் நோக் கம் நல்லதை உருவாக்கிக் கொண்டு தீய் வற்றை நீக்கி சந்தோசமாக வாழ வேண்டும் என்பதே. தீயவற்றை நீக்கியதன் மூலம் நீங்கள் உருவாக்கிக் கொண்ட ஆனந்தமே கொண்டாட்டமாக அமைகிறது என்று அகில இலங்கை சைவக்குருமார் சம்மேளனத் தலைவர் தனது பொங்கல் செய்தியில் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தைப் பொங்கல் பண்டிகை தமிழ் மக்களின் பாரம் பரிய பண்டிகையாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. ஆனால் எத்தனையோ தை பிறந்தும் எமக்கு இன்ன மும் வழி பிறக்கவில்லை. இந்த ஆண்டிலாவது வழி பிறக்கும் என்ற நம்பிக்கைத் துளிர் அனைத்து மக்களிடமும் குடிகொண் டுள்ளது.

2010 புத்தாண்டு சிவனுக்குரிய விரத தின மான வெள்ளிக்கிழமையும் திருவாதிரையும் கூடிய தினத்தில் பிறந்தது எமக்கு நல்ல சமிக் ஞையாக உள்ளது. அத்துடன் தைப் பொங் கலன்று அபிராமிப்பட்டர் விழா வருகின்றது. இது சக்தியினுடைய விழாவாகும். எனவே சக்தியும் சிவனும் இணைந்து எம்மைக் காப் பாற்றுவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இத்தினத்தில் போரின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங் கரங்களாக நாங்கள் எல்லோரும் இருக்கவேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து அனை வருக்கும் எனது தைப்பொங்கல் வாழ்த்துக் களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள் கின்றேன் என்று மேற்படி பொங்கல் வாழ்த் துச் செய்தியில் அகில உலக சைவக் குருமார் சம்மேளனத் தலைவர் சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் தெரிவித்துள்ளார்.

## டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ். முகாமைத்துவ சம்மேளனத்தினரால் ''டெங்கு கட்டுப்பாடு தொடர்பான மக்கள் விழிப்புணர்வு'' பற்றிய கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை இல. 17 பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உலக சுகாதார அமைப்பின் ஆலோசகர் வைத்திய கலாநிதி என். சிவராஜா, யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர், வைத்தியகலாநிதி ஆர். சுரேந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக சமூக, மருத்துவத்துறையைச் சேர்ந்த வைத்திய கலாநிதிகள் எஸ். சிவகணேசன், என். ராஜேஸ்கண்ணன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (6-4)

## பொலிஸார் முன்னாயத்தமின்றி சமுகமளிப்பதால் வழக்கு விசாரணைகளில் காலதாமதம்

### கொழும்பு பிரதான நீதவான்

(கொழும்பு)

வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார் முன் ஆயத்தமின்றி சமூகமளிப்பதனால் தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக கொழும்பு பிரதான நீதவான் சம்பா ஜானகீ ரஜரட்னம் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தும் மேலதிக கால அவகாசத்தை கோருவதனை பொலிஸார் வழமையாக்கிக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிதி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணைகளின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு பொலிஸார் உரிய ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (6)

## பக்திக்கும் மனநிம்மதிக்காகவுமே அற்புதங்கள் – பாபா

நவகால் எனும் பத்திரிகையில் அடியார் ஒருவர் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அற்புதங்களை மிகவும் விநயமாக எழுதியிருந்தார். இதனைக் கண்ணுற்ற அதே பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அற்புதங்கள் எனும் விடயம் பற்றி அறிய பாபாவைப் பேட்டி கண்டார். ஸ்ரீ சத்ய சாயிபாபாவைப் போல மிகவும் எளிதாகவும் இயற்கையாகவும் அற்புதம் நிகழ்த்தும் செயன்முறையை நான் ஒரு போதும் பார்த்ததில்லை என இறுதியில் அவர் கூறினார்.

பாபா பண்டரிபுரத்தில் ருக்மணிதேவியின் சிலைக்கு முன்னால் நின்று: மிகவும் தலையாயதான அணி ஒன்று இந்தச் சிலை மேல் இல்லையே என்றபடி தனது கையை அசைக்க அதில் கழுத்தில் அணியும் மங்கலமான பொன் அணி ஒன்று உருவாயிற்று. அதனை அவர் அந்த சிலைக்கு அணிவித்தார். அது இன்றளவும் அந்தச் சிலையின் கழுத்தில் இருக்கின்றது. இதனைப் பார்த்த அவ்வாசிரியர் ''பொருட்களைப் படைக்கும் உங்களது சக்தி குறைவற்றதா? என்று கேட்டார்''. அந்தச் சக்தி எல்லையற்றது. யார் எவராக இருந்தாலும் போதுமான அளவு என்னிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

ஆசிரியரும் துணிவுடன் ஸ்வாமியிடம் ஒரு கேள்வி ஒன்றைக் கேட்டார். அது குறைவற்றதாகில் அதனை வறுமையையும் மனிதனின் துன்பங்களையும் போக்கப் பயன்படுத்தாதது ஏன்? என்று கேட்டார். அதற்கு ஸ்வாமி பலமாக சிரித்துவிட்டு நீ வறுமையையும் துன்பங்களையும் பொருட்களை உடமையாய் இல்லாதவற்றோடு ஒப்பிடுகிறாய். அப்படியானால் இன்பத்தை,மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய பொருட்களை அதிகாரத்தோடு பெறக்கூடிய உயர் பீடத்தில் உள்ளவர்கள் மனநிறைவோடு இருக்கிறார்களா? அவர்களுக்கு மன நிம்மதி இருக்கிறதா? மனதிற்கு சம நிலையை அளிப்பதுதான் எனது செயற்திட்டம். பணக்காரர்களாக்குவதற்காக நான் பொருட்களைப் படைத்துத் தருவதில்லை. பக்தியும் இறை நம்பிக்கையும் வளருவதற்குத் தேவையானவைகளையே நான் அளிக்கிறேன் என்று கூறினார் ஸ்வாமி.



ஜெய்சாயிராம் யாதவன்



இலங்கை பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய தெல்லிப்பழை சைவப்பிரகாசம் வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி கையளிக்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற போது வட மாகாணப் பிரதி பொலிஸ் மா அதிபர் தயானந்த பண்டார மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டியை கையளிப்பதையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் வீரசிங்க அருகில் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-றம்சன்)*

# இந்திய அணியை வீழ்த்திய இலங்கை முக்கோண கிண்ணத்தைக் கைப்பற்றியது




(டாக்கா)

குலசேகர, வெலகெதரவின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் இலங்கை அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி முக்கோணக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதிய முக்கோணக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நடைபெற்றது.

இத் தொடரில் புள்ளிகள் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு இலங்கை–இந்திய அணிகள் முன்னேறின. இந் நிலையில் தொடரின் இறுதிப் போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியை ஆரம்பத்திலேயே குலசேகரவும் வெலகெதரவும் பந்து வீச்சினால் மிரட்டினர்.

இந்த ஜோடியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான காம்பீர் பூச்சியத்துடனும் விராட் ஹோலி 2 ஓட்டங்களுடனும் யுவராஜ் சிங் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 3.3 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து ஓரளவு பிரகாசித்த அணித் தலைவர் தோனி 14 ஓட்டங்களுடனும் விரேந்திர சேவாக் 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 10.4 ஓவர்களில் 60 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந் நிலையில் 6–வது விக்கெட்டுக்காக இணைந்த றெய்னா–ஜடேஜா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை மீட்டெடுத்தனர்.

இந்த ஜோடி 6–வது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களை எடுத்தபோது ஜடேஜா 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன் சிங் நிதானமாக ஆட மறுமுனையில்சுரேஸ்றெய்னா109பந்துகளில்தனது 3–வது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் இந்திய அணி 48.2 ஓவர்களில் 245 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சுரேஸ் றெய்னா 115 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 106 ஓட்டங்களையும் சகீர்கான் 16, ஹர்பஜன் 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் குலசேகர 10 ஓவர்கள் பந்து வீசி 48 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வெலகெதர 3 விக்கெட்டுக்களையும் ரான்டீவ், பெரேரா, டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஓட்டம் எதனையும் எடுக்காத நிலையில் முதலாவது விக்கெட்டையிழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 2–விக்கெட்டுக்காக இணைந்த டில்சான்–சங்கக்கார ஜோடி பலமான இணைப்பாட்டத்தை வழங்கியது. இந்த ஜோடி 2–வது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களை எடுத்தபோது திலகரட்ண டில்சான் 4[illegible] ஓட்டங்களுடனும் குமார் சங்கக்கார 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய ஜெயவர்த்தன நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சமரவீர 27, கண்டாம்பி 18, ரான்டீவ் 17 ஓட்டங்களை எடுத்து ஓரளவு பிரகாசித்து ஆட்டமிழந்தனர்.

இந் நிலையில் மஹேல ஜெயவர்த்தன நிலைத்து நின்று இறுதி வரை பிரகாசிக்க இலங்கை அணி 48.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முக்கோணத் தொடர் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 81 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 71 ஓட்டங்களையும் பெரேரா 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் நெகரா, யுவராஜ் சிங் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு வழியமைத்த குலசேகர ஆட்ட நாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை அணித் தலைவர் சங்கக்கார வென்றார்.


## அரசாங்க அறிவித்தல்

### நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்கான பின்வரும் பொருட்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

❖ சிவப்பு நாட்டரிசி

❖ கோதுமை மா (கிறின் பிரான்ட்)

❖ சீனி

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா. 5000.00 உம், மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா.50000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்றுத் தபால் உறையின் மேல் மூலையில் 'நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு 20.01.2010 ம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் ((Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

அத்துடன் பொருட்களுக்கான மாதிரியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பான பொருட்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு 15.01.2010 முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 20.01.2010 ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருட்களை விநியோகிப்பவர் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று தினங்களுக்குள் நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது**

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபரும்/மாவட்ட செயலரும்,
யாழ்.மாவட்டம்.

(C-4228)


## உதவி கோரிய இரு மாணவர்களுக்கு தெல்லிப்பழைப் பொலிஸாரினால் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தினரால் மாணவர் இருவருக்குத் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக நேற்றுக் கையளிக்கப்பட்டது.

பொலிஸ் நிதியிலிருந்து அவை கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன. கடந்த 10 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவால் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டன.

இவ் நிகழ்வைக் கண்ட தெல்லிப்பழை சரஸ்வதி வித்தியாலய ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தமக்குத் துவிச்சக்கர வண்டிகள் பெற்றுத் தருமாறு தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கேட்டுள்ளனர்.

அச் சந்தர்ப்பத்தில் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்த இலங்கை பொலிஸ் மா அதிபர் பிரஸ்தாப இரு மாணவர்களுக்கும் பொலிஸ் நிதியுதவியில் இருந்து இரு துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

இவர்களுக்கான துவிச்சக்கர வண்டி கையளிக்கும் நிகழ்வு நேற்றுத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. வட மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தயானந்த பண்டாரவால் அவை கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வின்போது காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மகேஷ் பெரேரா மற்றும் தெல்லிப்பழை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜலத் ஆகியோர் உட்பட பல பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச–7)

# தமிழர்தம் வாழ்வில்
# வளம் பொங்கட்டும்! நலம் தங்கட்டும்!



## ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை
## என்றும் நம் வாழ்விலே பஞ்சமே இல்லை

நிறைந்த வாழ்வுக்குரிய உழவர் பெருமக்களுக்கான உன்னதத் திருநாளாகிய பொங்கல் நாள் நமது நாட்டில் இந்துத் தமிழ் மக்களின் மரபும் சமய அனுட்டானங்களும் நிறைந்த நன்நாள்.

"உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்று உழவனைப் பெருமைப்படுத்துவது இந்த உயர்வாக்கு. உலகிற்கு உணவு கொடுக்கும் உன்னத பணிசெய்யும் உழவர் பெருமக்கள்தான் உயிர் கொடுப்பவர்கள். இத்தகைய பெருமைக்குரிய உழவனையும் அவர்தம் உழவுத் தொழிலையும் முதன்மைப்படுத்தி மரியாதை செய்யும் தைத்திருநாள் பொங்கல் தினம். உழவர் வாழ்வுக்கும், உழவுக்கும் ஆதாரசுருதியாக அனைத்தும் வழங்கும் சூரியபகவானுக்கு முதல் மரியாதை செய்யும் நாள் பொங்கல் நாள்.

எமது நாடு விவசாய நாடு. இந்த நாட்டின் ஜனாதிபதியாகிய நான், விவசாயப் பாரம்பரியம் மிக்க பிரதேசத்தின், விவசாயப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பிரஜை என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன்.

### எனதன்புத் தமிழ் மக்களே!

இந்த ஆண்டின் பொங்கல் திருநாள் மிகுந்த விசேடம் மிக்கது. பூரண அமைதியும், சுகமான சூழலும், சுபீட்சமான வாழ்வும் நிலவும் வேளையில் அனுட்டிக்கப்படும் பொங்கல் தினம் இது. கடந்த மூன்று தசாப்தங்களில் இந்தச் சூழ்நிலைகளில் பொங்கல் தினம் அனுட்டிக்கப்படவில்லை. பதற்றமான சூழ்நிலையிலும், தினமும் மரணபயத்திலும் வாழ்ந்த மக்களே பாரம்பரிய நிகழ்வு என்ற வகையில் கடமைக்காக, கடந்த பொங்கல் தினங்களை அனுட்டித்தார்கள். ஆனால், இந்த ஆண்டு பொங்கல், நாட்டின் சகல பாகங்களிலும் அமைதி வாழ்வும், நிம்மதி மூச்சும், சுபீட்ச சூழலும் திரும்பியுள்ள வேளையில் அனுட்டிக்கப்படும் முதலாவது பொங்கல் என்று குறிப்பிடுவதில் நான் பெருமையடைகின்றேன். இந்தச் சூழலுக்கு நாட்டைக் கொண்டுவரக் கூடியதான வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை எனது தாய்நாட்டிற்கும் எனது மக்களுக்கும் - குறிப்பாக எனது தமிழ் மக்களுக்கும் செய்துள்ள கடமையாகவே நினைக்கின்றேன் என்பதை அடக்கத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

### எனதன்புத் தமிழினமே!

வாசல்தோறும் வாழை கட்டுங்கள்!
வனப்புமிகு குருத்தோலைத் தோரணங்கள் அமையுங்கள்!
மாவிலைகளால் அவற்றை அலங்கரியுங்கள்!
புதுப்பானையெடுத்து பச்சை அரிசி இட்டு பால்கலந்து, பதமாகப் பயறுசேர்த்து, சர்க்கரையை சமமாக இணைத்து பொங்கலிடுங்கள்!
உங்களின் இனத்தவரும், உறவினரும் ஒன்றுசேர்ந்து களிப்பாக உண்டு மகிழுங்கள்!
அயல்வீடு எந்த இனமாயினும் அவர்களோடு அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!
பொங்கிவரும் பொங்கல் உங்கள் வாழ்வில் நிரந்தர நிம்மதியைத் தங்கவைக்கும் என்ற நினைவோடு "பொங்கலோ பொங்கல்" என்று மகிழ்வோடு ஆர்ப்பரியுங்கள்!
நாடு வளம்பெற, சகல இனங்களும் நலம்பெற ஒவ்வொருவர் வாழ்விலும் மகிழ்வு பொங்கிட இந்தப் பொங்கல் நாள் நமக்கு ஆரம்ப மங்கல நிகழ்வாக அமையட்டும்!

அன்புடன்

மஹிந்த ராஜபக்ஷ



# சுதந்திரத்தை அனுபவிக்க கிடைத்திருப்பது அனைவரினதும் மகிழ்ச்சிக்கு காரணம்-ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை வாழ் இந்துக்கள் உலகெங்கிலும் பரந்து வாழும் தமது இந்து சகோதரர்களுடன் சேர்ந்து பிரபலமான இந்துப் பண்டிகையான தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இவ்வேளையில் சுமார் 3 தசாப்தங்களாக அவர்களின் பெரும்பாலானவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த சுதந்திரத்தை அனுபவிக்கக் கிடைத்திருப்பது அவர்களது மகிழ்வுக்குப் பெரிதும் காரணமாய் அமைகிறது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

இந்துக்களின் பஞ்சாங்கத்தில் மிக விசேடமான ஒரு பண்டிகையான தைப் பொங்கல் மரபுகளையும் கிரியைகளையும் இந்துக்கள் தொடர்ந்தும் அனுஷ்டித்து வருகின்றனர்.

இரண்டு வகையில் புனிதமாகக் கருதப்படும் இத்தினம் சிறந்த அறுவடையை எதிர்பார்த்தும் விவசாயிகள் தமது கடின உழைப்புக்குப் பின்னர் பெற்ற அறுவடைகளுக்காகவும் அதை அளித்த சூரிய பகவானுக்கும் நன்றி செலுத்துவதற்காகவும் கொண்டாடப் படும் ஒரு பண்டிகையாகும்.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கொண்டாடப்படும் தைப்பொங்கல் பண்டிகையின் போது இந்துக்கள் தமது பாரம்பரிய கலாசார மரபுகளை அனுஷ்டித்து அவற்றுக் குத் தம்மை அர்ப்பணித்து எதிர்காலம் குறித்து எமது சமூகத்தில் அமைதி, சுபீட்சம், புரிந்துணர்வு ஏற்படவும் சாதகமான எதிர்பார்ப்புக் களை வைத்திருக்கின்றனர்.

இது எமது சமூகத்தின் பன்மைத் துவத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இன்றைய தைப்பொங்கல் தினத்தில் எமது இந்து சகோதரர்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கை தரும் எதிர்பார்ப்புக்களை வைப்பதற்கும் வென்றெடுக்கப்பட்டுள்ள தமது தாயகத்திற்காக நன்றி செலுத்தவும் தங்களது குழந்தைகளைப் போன்றே முழு இலங்கையர்களுக்கும் புதியதோர் இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமைக்காகவும் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை வாழ் அனைத்து இந்துக் களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு எம்மிடையே சமாதானமும் சுபீட்சமும் நல்ல நம்பிக்கையும் புரிந்துணர்வும் நிலைக்கட்டும் என்ற அவர்களது பிரார்த்தனைகளில் நானும் இணைந்து கொள்கின்றேன் என்றுள்ளது. (ச)

## யாழ்.கல்வி வலயத்தில் தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இன்றுகாலை 9 மணிக்கு நடைபெறவிருக்கும் தைப்பொங்கல் விழாவில் யாழ். வலயக் கல்வி உத்தியோகத்தர்களையும் பாடசாலை அதிபர்களையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச)

## கட்சி ஆதரவாளர்களிடை...

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக பேரணி ஒன்று நடத்தப்பட்ட வேளையில் அந்த வழியாக சென்ற அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் வாகனம் பேரணியை ஊடறுத்து சென்ற வேளையிலேயே மோதல் இடம் பெற்றுள்ளது.

பின்னர் வாகனங்களுக்கு சேதங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எரியூட்டல் நிகழ்வு களும் இடம் பெற்றுள்ளன.

சம்பவத்தை அடுத்து பொலநறுவை நகரில் பதற்றநிலை தோன்றியதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மோதல் சம்பவத்தில் காயமடைந்த பலர் பொலநறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

## பி.பி.சி. செய்தியாளர்...

சுதந்திர கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற சமயமே இச் செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் ஐ.ம.சு. கூட்டணியின் ஆதரவாளர்களாலேயே தாக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

இம் மோதல் சம்பவம் குறித்து செய்தியை சேகரித்து விட்டு குறிப்பிட்ட பகுதியிலிருந்து வெளியேறும் போது இவர் தாக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அவரின் செய்தி சேகரிப்பு தொடர்பான கருவிகள் மற்றும் அவர் அணிந்திருந்த நகை கள் என்பனபறிமுதல்செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்க சிறப்பு பொலிஸ் பிரிவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததாக பி.பி.சி. தெரிவித்தது. (ச-5)

## கூட்டமைப்பு-பொன்சேகா...

படை நடவடிக்கைகளின் மூலம் யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது.

இதனால் தமிழ் மக்கள் நன்மையடைந்ததோடு சுதந்திரமாக வாழும் உரிமையைப் பெற்றனர்.

நாம் இந்நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் வாழும் உரிமை கிடைத்தது.

ஆனால் ஈழக் கொள்கையை தொடர்ந்தும் முன்னெடுத்து வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சரத் பொன்சேகாவும் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தால் இலங்கையின் மீது வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

நாட்டில் சமாதானத்தை சீர்குலைக்கும் சக்திகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளன. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்ட மறுகணமே கனடா ஜெர்மன் மற்றும் பல நாடுகளில் புலி ஆதரவாளர்கள் வீதியில் இறங்கி ஆரவாரம் செய்தார்கள்.

எமது நாட்டின் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களை சர்வதேசம் சுமத்தியதோடு ஐ.நாவின் மனித உரிமை ஆணைக் குழுவும் எமது நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றம் சுமத்தியது. (ச-5)

## அரசை போர்க்குற்றச்...

மேற்கொள்ள வேண்டும் என அவர் பரிந்துரை செய்திருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூனிடம் இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்கு பான் கீ மூன், பிலிப் அல்ஸ்டன் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு மனித உரிமை ஆய்வாளராக காணப்படுகின்ற போதும், அவர் சுதந்திரமாக செயற்படுபவர் என விளக்கமளித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து பிலிப் அல்ஸ்டனை பான் கீ மூன் ஓரம்கட்டப் பார்க்கிறார் என இன்னர்சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் பான் கீ மூன் இந்த கேள்விக்கு இலங்கை அரசாங்கத்துக்கு மிகவும் சாதக மான பதிலையே வழங்கியிருப்பதாக கூறப் பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டிருக்கும் நிலையில் அது தொடர்பில் ஆராயப்பட்டே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்எனபான்கீமூன்குறிப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## அரசியல் கைதிகளின் நிலை தொடர்பில்...

என கோரிக்கை விடுத்திருந்த நிலையில்,

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா, அமைச்சர்மிலிந்தமொறகொடவுடன்தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா நேற்றைய தினம் முற்பகல் அமைச்சர் மிலிந்த மொறகொட மாத்தறையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பங்குபற்றி இருந்த போது நான் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினேன்.

அப்போது அவரிடம் நீங்கள் கைதிகளை நேரில் சென்று சந்திக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

அப்பொழுது அவர் அரசியல் கைதிகளை சந்தித்து போலியான வாக்குறுதிகளை வழங்க நான் தயாராக இல்லை எனவும் அனைத்துச் சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகள் தொடர்பிலான விபரங்கள் சேகரிக் கப்பட்டு வருவதாகவும் கைதிகள் தொடர்பில் எடுக்க வேண்டியநடவடிக்கைகள் குறித்து இரண்டு நாட்களுக்குள் பூரண அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன் போது நான் அவரிடம் கைதிகளை நீங்கள் சென்று சந்திக்காவிடினும் உங்கள் சார்பில் தகுதி வாய்ந்த அரச பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்தேன்.

அதனை ஏற்றுக்கொண்ட அவர் பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைப்பதாக உறுதி அளித்துள்ளார் என்று சிறிகாந்தா எம்பி மேலும் தெரிவித்துள்ளார். (ச-14)

## ஜெனரல் சரத் பொன்சேகா...

விசாரணையை மேற்கொள்ளுமாறு மனுதாரர் கோரியுள்ளார். இந்த மனுவில் பிரதிவாதிகளாக எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகா, தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, தேசிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா மீது ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யச்சென்ற சமயமும், பொன்சேகாவுக்கு எதிராக அவரின் வேட்பு மனுவை நிராகரிக்குமாறு கோரிக்கை விடப்பட்டமையும் அதனை தேர்தல் ஆணையாளர் நிராகரித்தமையும் குறிப்பிடத்தக்கது (ச-5)

## அரியாலை மற்றும் தென்...

ஏ-9 வீதி வழியாகவும் யாழ். கேரதீவு வீதி வழியாகவும் அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்செல்ல அவரைத் தொடர்ந்து பின்னால் சென்று அதி உயர் பாதுகாப்புவலயத்திற்குள்பிரவேசித்தனர்.

இச்சமயம் வீதியில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து தடைகளும் அகற்றப்பட்டிருந்தது. சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் வைத்திருந்தோர் அந்தந்த வண்டிகளிலேயே உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசித்தனர். உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்கலாம் என்ற செய்தி வெகுவேகமாக பரவத் தொடங்கியதும் மேலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு சென்றனர்.

இந்நிகழ்வின் போது அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நான் சொன்னதைச் செய்வேன் செய்வதைச் சொல்வேன். இங்குள்ள வீடுகளில் அனேக மானவை சேதமடைந்துள்ளன.

பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்போடு முதற்கட்டமாக உங்கள் காணிகள் வளவுகளை சுத்தம் செய்யுங்கள். முக்கியமாக மிதிவெடி அபாயம் குறித்து மிகவும் எச் சரிக்கையுடன் செயற்படுங்கள். அத்துடன் கிணறுகளை இறைப் பதற்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை ஆளுநர் பெற்றுத்தரவுள்ளார். பின்னர் வீடுகளை திருத்தம் செய்து உடனடியாகவே குடியேறலாம் என அறிவித்தார். (ச-5)


விற்பனையாளர்களின் கவனத்திற்கு

உங்கள் வாடிக்கையாளர்களை கவர்வதற்கான திட்டத்துடன் இருக்கிறீர்களா!

அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

எம்மால் சகலவிதமான விளம்பர பொருட்கள் உங்கள் நிறுவன பெயருடன் செய்து கொடுக்கப்படும்.

T shirt, Caps, Bags, Clocks, Umbrella, Keyholder, Wrist watch, Pens, Penholders, Tie School budge, Shoot மேலும் பல

JoJeNi Jaffna

53, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No: 071 9329522

தொடர்புகளுக்கு:

Colombo

Jojeni Business Gifts, 36/7, C Averiwatta Road, Wattala, 011-5610951/ 060-2109104

(C-350)



Systems Engineer MCP - MCSE

Become an Engineer

கற்கும் அனைவருக்கும Free

ICDL-Computer Driving Lincence)

Dip.. in hardware

A+,N+ (ComTIA)

Per Module Rs.3800 Only

இச்சலுகை 16.01.2010 வரை மட்டுமே.

விபரங்களுக்கு நேரில்

MCS Supported By UNDP/JRRP

324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம், Bus Root - 764

T.P-772395895 http://www.mcsitcampus.org



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தை திருநாள் வாழ்த்துக்கள்!

பொங்கல் வாழ்த்து!

HAPPY THAI PONGAL

✓ PC Assembling ✓ Computer Networking ✓ PC Upgrading ✓ Software Development ✓ PC Trouble shooting ✓ Virus Protection ✓ PC Service & Software installation

தை திருநாளை முன்னிட்டு மிகக்குறைந்த விலைகளில் கணனிகளை பெற்றுக்கொள்ள!

WebCam A4 Tech, Casing Powerlogic, Bluetooth Dongle, Card Reader, PCI Modem, Woofer, D-Link Router PCI TV Capture Card, Laptop Speaker, USB Light, Recovery Card, hp No.1 Toners, Computer Table, PCI Modem, Printer

3 வருட உத்தரவாதம்! நம்பிக்கை - உத்தரவாதம் - நிரந்தரம் விற்பனைக்கு பின்திய சேவைகள்

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101

M.M.V Nelliaddy Road, Nalliaddy


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.